




"மந்திரி கூறும் யோசனையோ, செய்யும் முடிவோ அரசாங்கத்தின் உத்தரவாகிவிடாது. அரசியல் சட்டத்தின் 166 (1)-வது பிரிவில் கூறப்பட்டுள்ள நடைமுறைப்படி அரசாங்கக் காரியதரிசி உத்தரவு பிறப்பித்து, அதைக்கவர்னர் அங்கீகரித்தால்தான் அரசாங்க உத்தரவாகும்" என்று ஏப்ரல் 4-ந்தேதி சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதிகள் இராஜகோபாலனும் இராஜகோபாலய்யங்காரும் ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர். அந்த முடிவில் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றனர், என்ன தான்மந்திரிகளாயிருந்தாலும்"நிர்வாகத்தின் தலைமை அதிகாரி கவர்னரே. ஒரு மந்திரி கூறும் யோசனையோ முடிவோ அரசாங்க உத்தரவாகிவிட முடியாது. கவர்னர் பெயரில் உத்தரவு பிறப்பிக்கப்படும்போதுதான் அதற்கு அத்தன்மை ஏற்படுகிறது...அரசாங்கம் என்பது மந்திரிகளால் மட்டும் ஆனதல்ல. மந்திரிகளின் ஆலோசனையுடன் நடந்துகொள்ளும் கவர்னரும் என்பதுதான் பொருள்" என்பதாக. கவர்னருக்கு, இந்திய அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தைப் பார்த்தீர்களா! இந்த அதிகாரம் போதாதாம் கவர்னர்களுக்கு -கூறப்படுகிறது!!

*

இந்திய அரசியல் சட்டத்தை இயற்றியவர்களின், மூல மனிதர் நேருபண்டிதர். அவர் அண்மையில், ஒரு இடத்தில் பேசுகிறபோது சர்க்கார் அதிகாரிகளைப்பற்றிக் குறைபட்டுக்கொண்டுள்ளார். அதிகாரிகள், சுதந்திரம் வந்தபின்னரும்!! பழைய முறைகளையே [பின்பற்றி வருகின்றனராம். இதுதவறு, புதிய பாதை புகவேண்டும் என்று போதனை செய்துள்ளார். இப்படிப் போதனை செய்யும்! இவர் ஏன், கவர்னர்களை மட்டும் பிரிட்டிஷாரைப்போல ஒரு மாநிலத்தின் ஆட்சிக் கண்காணிப்பாளராக வைத்திருக்கவேண்டும்?

*

அதிகாரிகளைப்பற்றி நேருபண்டிதர், — ஏழாண்டுக்குமேல் ஆட்சி புரிந்துவரும் இந்தியப் பிரதமர்— அப்படிச் சொன்னது போலவே, கடந்த ஏப் 6-ந்தேதி பரமக்குடியிலும் ஒருவர் பேசியிருக்கிறார், "சட்டங்களில் உள்ள நல்ல நோக்கங்களை அதிகாரிகள் சரிவரப் புரிந்து கொள்ளுகிறார்களில்லையே! என்ன செய்வது?" என்பதாக. இவ்வளவு விரக்தியுடன் அதிகாரிகளின்மீது குற்றம் சாட்டும் இவர், பெரிய நிர்வாக அதிகாரியாகஇருந்தவர்போலும்! சட்டங்களைக் கூட அதிகாரிகள் சரிவரப் புரிந்து கொள்ளுவதில்லை என்று கூறுவதால், பெரிய சட்ட நிபுணர் போலும்!—என்றுதான், எண்ணத் தோன்றும். இப்படிச் சலித்துக் கொண்டவர், வேறுயாருமல்ல காமராஜ்!!!

*

மக்களை மறந்து மந்திரிகளாயிருப்பவர்கள் நடக்கத் தலைப்பட்டால் அவர்களின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை சென்ற பொதுத்தேர்தலில்'சென்னை' காட்டிற்று! பாகிஸ்தானில், கீழ்வங்கம் நிருபித்தது! இப்போது, இலங்கை, உதாரணமாக விளங்குகிறது! அங்கு நடைபெறும் பொதுத்தேர்தலில், ஏழு மந்திரிகளுக்கு மேல் மண்ணைக் கவ்வினர்களாம். அவர்களில் தொழிலாளர் இலாகா மந்திரியான டாக்டர் கலீல் என்பவரைத் தோற்கடித்தவர் யார் தெரியுமா? ஒரு சாதாண பியூன்! அவரது பெயர், எம். எஸ். தெமிஸ்!!

*

பூனா கார்ப்பரேஷன், ஒரு விசித்திரமான பொழுதுபோக்கைக் குழந்தைகளுக்காக ஏற்படுத்தியிருக்கிறது. அதன்படி அங்குள்ள பூங்கா ஒன்றில், ஒரு இரயிலை ஓடவிட்டிருக்கிறார்கள்! அந்த இரயிலுக்கு, இரண்டு பெட்டிகள்தான் உண்டு. அதில், 32-குழந்தைகள் பிரயாணம் செய்யலாம். கார்ப்பரேஷனின் தொழிற்சாலையொன்றில் செய்யப்பட்ட இந்த இரயிலுக்கு மொத்தம் செலவானது ரூபாய் இருபதினாயிரமாம்! அந்த இரயிலுக்கு பூ ராணி எனும்பெயரிடப்பட்டிருக்கிறது.

*

மிலான் நகரிலுள்ள ஒரு குருட்டுப் பையன் ஒரு பாதிரியாரின் கருணையால் பார்வையைப் பெற்றிருக்கிறான்! டான்னேச்சி எனும் பெயர் கொண்ட அப் பாதிரியார் தான் சாவதற்கு முன்பு விடுத்த விண்ணப்பம் ஒன்றில் தன்னுடைய 'கண்ணின் மணிகளை' தானம் செய்வதாக மருத்துவ விடுதியினருக்குத் தெரிவித்திருந்தாராம். அதன்படி, இறந்த அவருடைய கண்ணின் மணிகளை எடுத்து குருட்டுப் பையனுக்குப் பொருத்தி, அவனுக்குக் கண்ணளித்திருக்கிறார்கள் டாக்டர்கள்! வெளிநாட்டில் "கண் தானம்" நடமாடும் பிணங்களாக வாழவேண்டியவர்களைப் 'புது மனிதர்' களாக்குகிறது!!

*

சென்னையில் இந்தக் கிழமை நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமை வகித்த "ஆனந்த விகடன்" ஆசிரியர் தேவன் பேசுகிறபோது, "திராவிட மொழிகளில் சாலப் பெருமை வாய்ந்தது, தமிழ்!" என்று குறிப்பிட்டாராம். திராவிடமாவது, ஆரியமாவது என்று கூறியவர்கள்தான் இக்குழுவினர். அவர்களுக்குக்கூட இன்றைய தினம், இந்த உண்மையை மறுக்க முடியாத கட்டம் ஏற்பட்டிருக்கிறது, தமிழகத்தில்.

★

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 41
15-4-56

# எத்தரும் ஏமாளியும்

"வடக்குத் தெற்கைப் புறக்கணிக்கிறதாம்! எவ்வளவு வரட்டுத்தனமான பேச்சு, இது? எங்கே, வடக்கு தெற்கை ஏமாற்றுகிறது! இதெல்லாம் விஷயமறியாதவர்களின் விதண்டாவாதம். இப்படியெல்லாம் நீங்களும் பேசாதீர்கள். டில்லி, நம்மை மாற்ருந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதாகச் சொல்லுவதெல்லாம், தப்பு! தப்பு! சுத்தத் தப்பு!!", என்பதாகக் கூறியிருக்கிருர்.

சென்னை சட்டசபையில் பேசிய நிதியமைச்சர் டில்லியிடம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக பங்கு கேட்கவேண்டும் என்பதாகப் பேசினரே, அவருக்கு இப்படி அறிவுரை விடுத்துள்ளார் போலும் வடநாட்டுத் தேபர், என்றெண்ணக்கூடும் தோழர்கள். அல்ல, நண்பர்காள் அல்ல! வடக்குக்கு வக்கீலாகும் இந்த ஆள் வேறு யாருமல்ல, எந்த சுப்பிரமணியம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்குச் சம பங்கு அளிக்கவில்லை டில்லி சர்க்கார் என்று குறைப்படுகிருரோ அந்தச் சுப்பிரமணியத்துக்கு மேல் முதலமைச்சராக அமர்ந்திருக்கும் காமராஜர் தான் இவ்வண்ணம் பேசியிருக்கிருர், கடந்த 10ந் தேதி, ஓசூர் எனும் ஊரில்.

தொழிலறிஞர்களும், பொருளாதார வல்லுநர்களும், வரலாறு அறிந்தவர்களும் மறுக்கிருர்களில்லை—வடக்கு வழங்கும் அநீதி குறித்து! சிம்சன் கம்பெனிஅனந்தராமகிருஷ்ணன் செல்லுமிடந்தோறும் முழக்குகிருர்—செட்டிநாட்டு முத்தையா டில்லியை என்போன்ருரும்கூட எதிர்க்க நேரிடும் என எச்சரிக்கிருர்—சட்டசபையில் இந்த அக்கிரமம் குறித்து காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள்கூட கச்சையை வரிந்து கட்டித் தோள் தட்டி யிருக்கிருர்கள்—புள்ளி விபரங்களை அள்ளிக்கொட்டிடும் கம்யூனிஸ்டுக் கட்சி இராமூர்த்தியார்கூட, 'கோவிந்தா ஆகிவிட்டது' என்று குமுறியிருக்கிருர். இந்து, மித்திரன், தினமணி, மெயில் — ஏன்! காமராஜரை வாழ்த்தும் விடுதலைகூட!—அடிக்கடி இந்த அநீதியைக் குறித்து கண்டிக்காமலில்லை. சோஷியலிஸ்டுக் கட்சி, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், பிரஜா குழுவினர் யாவருமே, நாம் கூறிவரும் குற்றச்சாட்டை ஒத்துக் கொள்ளுகிருர்கள். ஆச்சாரியார், அவருக்கு முன் ஆண்டவர்களான குமாரசாமியார், ஓமந்தூரார் எல்லோருமே டில்லியுடன் சண்டைபோடாமலிருந்தது கிடையாது. 300 கோடி கேட்டு பாதிகூடக் கிடைக்கவில்லையே, என்று பதறுகிருர்கள் இவருடைய சகமந்திரிகளான சுப்ரமணியமும் பக்தவத்சலமும். ஆனுல், காமராஜர் சொல்லுகிருர், வடக்கு எங்கே தெற்கைப் புறக்கணிக்கிறதென்று? அப்படியெல்லாம் பயமடையாதீர்கள் என்று அபயம் வேறு தருகிருர்! அன்பர் காமராஜர்—மன்னிக்க வேண்டும், நண்பர்களே! — சிறந்த அறிஞரல்ல, பொருளாதாரத் துறையில், ஆயினும் மக்களின் குறைபாடுகளையும், நாட்டின் தேவைகளையும் அறியக் கூடியவர்; ஆதலால் அது ஒரு தகுதியின்மை அல்ல நாடாள்வதற்கு என்றே எண்ணி வருகிருேம், நாம். ஆனுல், அப்படி எண்ணிடாதீர், எனக்குத் தேசியமும் நேரு பண்டிதரும்தான் பெரிதே யொழிய தமிழகம் அல்ல! தமிழகம் எவ்வளவு தவித்தாலும், டில்லியினர் மீது பழி சொல்ல முயலமாட்டேன் என்று எசமான் விசுவாசம் காட்டுகிருர். எடுபிடியல்ல, காமராசர்; நாடாள்கிறவர். ஆயினும் இப்படிப் பேசுகிருர்!

"சென்னை சர்க்காரே! சென்னை சர்க்காரே! உங்களது திறமைக் குறைவால், இழந்தது ஏராளம்.

பம்பாயும், பஞ்சாபும், வங்கமும் மத்தியப் பிரதேசமும் பெற்றிருக்கும் சாதாரண நலன்களைக் கூடக் 'கோட்டை' விட்டிருக்கிறீர்கள்.

(1) பிற மாகாணங்கள், டில்லியின் உதவியுடன் தொழிலாளர்களுக்குக் கட்டிக்கொடுத்திருக்கும் வீடுகள் ஏராளம். ஒரு வீடுகூட கட்டித்தரவில்லை நீங்கள்.

(2) விளையாட்டு மைதானம், நீந்தும் குளம், நாடக மேடை முதலியவைகளைக் கட்ட டில்லி, தொகை உதவி வருகிறது. ஒன்றுகூட நீங்கள் கட்டவில்லை, அந்த உதவியைப் பெற்று.

(3) புயலால் பாதிக்கப்பட்ட ராமநாதபுரத்திலிருந்து நாகப்பட்டினம் வரையில் கடலோரமாக ரோடு போடும்படி செய்திருக்கலாம். விட்டுவிட்டீர்கள்.

(4) இலங்கை, பர்மா, அந்தமான், நிகோபார் முதலிய வெளி இடங்களுக்குப் போய் விரட்டப்படுவதால் திரும்பி வரும் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளைத் தேடித் தந்திருக்கலாம். செய்யவில்லை, நீங்கள்."

என்று கடந்த ஏப்ரல் முதல் தேதி புதுடில்லியிலிருந்து இங்கிருந்து சென்றிருக்கும் பார்லிமெண்டு உறுப்பினர்கள்-எதிர்க்கட்சியினரல்ல; காங்கிரஸ் கட்சியினர்தான்!—ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிருர்கள், காமராஜ் அரசுக்கு.

பம்பாயும், பஞ்சாபும், மத்தியப் பிரதேசமும்' வங்கமும், டில்லி சர்க்கார் மாகாணங்களுக்கு எந்தெந்த வகையில் உதவ இருக்கிறது என்பதை உடனுக்குடன் அறிந்து அந்த உதவிகளைப் பெறவும், பெற இயலாவிடில் தமது பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கு நினைவூட்டிடவும் புதுடில்லியில் ஒவ்வொரு மாகாணமும் தம் சார்பில் ஒரு அலுவலகம் (Liaison office) வைத்திருக்கிறதாம்.

அப்படியொரு அலுவலகம், சென்னையின் சார்பில் இல்லாதது பெருங் குறை என்கிறார்கள், உறுப்பினர்கள்!

"தனியாக இவைகளைக் கேட்டுப் பெற ஏன் ஒரு அலுவலகம்? இங்கிருந்துதான் எதற்கெடுத்தாலும், நம்ம மந்திரிகள் பறந்து பறந்து போய் வருகிறார்களே" என்று கேட்கலாம், தோழர்கள். அப்படி இவர்கள் பறந்து செல்வதைவிட, அங்கேயே ஒரு வாதாடும் அலுவலகம் இருப்பது எவ்வளவோ மேல் என்கிறார்கள்! அதோடு, சென்னை சாதாரண உதவிகளைப் பெறுவதில்கூட இழந்திருக்கும் விபரப் பட்டியலும் தருகிறார்கள்!!

அத்தகைய திறமையற்ற அரசை நாம் பெற்றிருக்கிறோம், காமராச ரிடம்! இந்த அழகில் பெரிய பெரிய ஆலைத் திட்டங்களுக்கும் அணைக் கட்டுகளுக்கும் சண்டைபோட்டுபணம் வாங்கித்தர வேண்டுமென்றும் காமராஜரை எதிர்பார்க்கிறது, நாடு. அவரோ, வடக்காவது தெற்கை ஏமாற்றுவதாவது, என்கிறார்!

"ஐயோ, பாவம்! எல்லாப் பிள்ளைகளுக்கும் வாயிருப்பதால், கேட்டு வாங்கித் தின்கிறது. இந்தப் பிள்ளைக்கோ, வாயுமில்லை, மூளையுமில்லை. அதற்காக நாம் அதன் தலையிலடிப்பதா?", என்றுதான் தாய் கருதுவாள், எந்தப் பிள்ளை அசடாக உளதோ அதற்குத்தான் அதிகச் சலுகையும்கூட அளிப்பாள்.

காமராஜ் அரசு, திறமையற்றது, அதனால்தான் இந்தச் சிறு திட்டங்களைக்கூட நம்மைக் கேட்டுப் பணம் வாங்கி நடத்தவில்லை. அதனால் என்ன? அவரும் நமக்கு வேண்டியவர்தானே! நாளைய தினம அவரை மக்கள் பரிகாசம் செய்தால் நமக்கும் தானே பங்குண்டு என்று எண்ணவில்லை, டில்லி.

ஏன், எண்ணப்போகிறது டில்லி? எத்தனுக்கு அகப்பட்ட வரையில் சுருட்டுவதுதானே குறிக்கோள்! ஏமாளிக்கு எப்படிச் சகாயம் செய்ய முன் வருவான் எத்தன்?

தாயல்ல, டில்லி; எத்தன் என்பது தெளிவாக விளங்குகிறது, நமக்கு.

எனினும், அலட்சியமாகப் பேசுகிறார் காமராஜர், வடக்கு எங்கே தெற்கை ஏமாற்றுகிறது, என்று.

ஏமாளிகளிலும் இப்படிப்பட்ட ரகத்தைக் காணும் பாக்கியம் நம்மைத் தவிர யாருக்கும் கிடைத்திருக்காது! குட்டக் குட்டக் குனியும் அதிசயமே அதிசயம்!

எத்தன்! ஏமாளி!!—இடையில் நாடு; எண்ண பயங்கரமாகத்தானிருக்கிறது நமக்கு. ★

## ★ விடுதலை பெற்றது ★

ஆதிக்கபுரி சரிந்து வருகிறது என்பதை எடுத்துக்காட்டுவதுபோல வட ஆபிரிகாவிலுள்ள மொராக்கோ அந்நியர் பிடியினின்று விடுதலை பெற்றிருக்கிறது. நாற்பதாண்டு காலமாகத் தமது களிநடனக் கூடமாக மொராக்கோவைக் கருதியிருந்த ஸ்பெயின் சர்க்கார் கடந்த 8-ந் தேதி இந்த இன்பச் சேதியை அறிவித்துள்ளார்கள். ஸ்பெயினை ஆளும் பிராங்கோ வாழும் சர்வாதிகாரிகளில் ஒருவர் எனக் கருதப்படுபவர்! அவரே, மொராக்கோவின் விருப்பத்துக்கு இணங்கினர் என்றால் அதற்குள்ள காரணம் விடுதலைபுரிப் படையினர் இதுகாறும் மொராக்கோவில் செய்து வந்த விடுதலைக் கிளர்ச்சியினாலே யாகும்.

எத்தனை நாளானாலும், எப்படியெப்படி சமாளிக்க நினைத்தாலும், பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் நீட்டினாலும், ஒரு நாட்டை இன்னொரு நாட்டார் ஆளுகின்ற கொள்கையை இனி மக்கள் மன்றம் ஏற்காது என்பதையே விடுதலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைபெற்றிருக்கும்மொராக்கோ தாயகத்தைத் தனி நாடமைப்பதற்காகப் பாடுபடும் நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கிறது. உதயங்களைத் தடுக்கவும் அஸ்தமனங்களை நிறுத்திவைக்கவும் யாராலும் இயலாது! அதற்கான முயற்சிகளைச் செய்வதும், வீண் பிரயாசைதான், என்றும், விடுதலைப்படை, வெற்றி பெற்றே தீரும். சுதந்திர மொராக்கோவுக்கு நமது வாழ்த்துகள். ★

## ★ ஒரு யோசனை ★

உயர் சாதியினர் என்போருடன் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களும் சேர்ந்து வாழுமாறு காலனிகள் கட்டித்தர வேண்டுமென்ற நமது விருப்பத்தைத் தீட்டியிருந்தோம், சில வாரங்களுக்கு முன்பு. ஆந்திர அரசு இவ்வண்ணம் செய்ய திட்டம் தீட்டியிருப்பதையும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

ஏப் 4-ந் தேதி இதுபற்றி சட்டசபையில் ஒரு உறுப்பினர் கேட்டபோது அமைச்சர் பரமேசுவரன், "ஆமாம்! அப்படிச் செய்யவேண்டுமென்கிற ஆசை எங்களுக்கும் இருக்கிறது" என்று அறிவித்துள்ளார். மகிழ்கிறோம்! தமிழ் நாட்டு அரசும், ஆந்திர அரசைப்போல உயர் வகுப்பினர் என்போருடன் தாழ்த்தப் பட்டோரும் சேர்ந்து வாழும் வகையில் காலனி'களைக் கட்டித்தர ஆசைப்படுவதாக அவர் தெரிவித்திருக்கிறார். இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம், நாம் சொன்னோம் என்பதற்காக மந்திரியார் 'முருக்க மரம்' ஏருமைக்காக:

திட்டம் தீட்டப்போகிறோம் என்று தெரிவித்த அமைச்சர், "அதை நிறைவேற்றப் பணமில்லை. ஆகவே, டில்லியை நோக்கி வேண்டுகோள் விடுத்துள்ளோம். அங்கிருந்து என்ன பதில் வருமென எதிர்பார்க்கிறோம்!" எனவும் தெரிவித்துள்ளார்.

டில்லி, இதுவரை, இந்த மந்திரிகள் கேட்டதற்கு என்ன பதிலளித்து வருகிறது என்பதை அறியாதவர்களல்ல நாம்! ஆயினும், அமைச்சரின் ஆசை நிறைவேற வேண்டுமென விரும்புகிறோம்!

தோழர் பரமேசுவரன் வசம் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களின் நலம் பேணும் பொறுப்பு மட்டுமல்ல, கடவுளரின் பரிபாலன இலாகாவும் இருக்கிறது. ஒவ்வொரு கோயிலுக்கும், ஏராளமான மனைக்கட்டுகள் குடியானவர் தெருக்களிலும், ஊருக்குள்ளும் உள்ளன. அவைகளையெல்லாம் நீண்ட ஆண்டுக் குத்தகைக்கு எடுத்து பணம் படைத்தவர்கள் அவைகளில் வீடுகளைக் கட்டிக் கொடுத்தும் கடைகளைக் கட்டியும் வருமானம் அடைந்து வருகிறார்கள்! இந்த மனைக்கட்டுகளில் பெரும் பாகத்தை, தாழ்த்தப்பட்டப் பெருங்குடி மக்களுக்கு 'பட்டா' செய்து கொடுக்க வேண்டுமெனக் கோருகிறோம். அப்போது, அக்கிரகாரங்களிலும், உயர்சாதிக்காரர்கள் என்போருடனும், சேர்ந்து வாழும் நீதி தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்குக் கிடைக்கும். ஆண்டவனும் நிச்சயம் மறுக்கமாட்டார் என்பதை அமைச்சருக்கு உறுதி கூறுகிறோம்.

சம நீதியுடன் வாழச் செய்யும் ஆசை எமக்குமுண்டு, பண உதவிக்காக டில்லியை நாடி இருக்கிறோம் என்று சொல்லி அமைச்சர் தப்பித்துக்கொள்ள முயலக்கூடாது.

இந்து அறநிலையங்கள் குறித்து விரைவில் ஒரு புது மசோதா வரப் போவதாகத் தெரிகிறது. அதில், இப்படிச் செய்வதற்கான அம்சத்தையும் அமைச்சர் சேர்க்க வேண்டும்.

சேர்ந்து வாழச் செய்தும், பொருளாதார உதவிகளை அளித்தும் தாழ்த்தப் பட்டோருக்கு ஆவன செய்ய வேண்டும், அரசு, அவர்களில் சிலரை, கோயில் தர்மகர்த்தாக்களாக ஆக்க முயற்சித்து வருவது மகிழ்ச்சிக் குரியதே. ஆனால், அதோடு நின்றுவிடக் கூடாது. அவர்கள், ஏனையோரைப்போல வாழும் நிலையையும் உண்டாக்க வேண்டும்.

அதனால் இந்த யோசனையை அன்பர் பரமேசுவரன் பார்வைக்கு வைக்கிறோம்! அவரும் ஒரு பழங்குடிப் பெருமகன், என்பதால்!! ★

# ஊர்வலம்

[நமது நிருபர் பேட்டி]

ஞானக்கண்! ஞானக்கண்!—என்று ஆசிரியர் கூப்பிட்ட குரல்கேட்டு ஓடினேன்.

"இன்றுமுதல் நமதுஏட்டின் தனி நிருபராக உன்னை நியமனம் செய்திருக்கிறேன். ஓடு, யாரையாவது பேட்டி கண்டு முக்கிய தகவல்களுடன் வா!'' என்று உத்தரவிட்டார்.

எங்கே ஓடுவது, யாரைப்போய்ப் பார்ப்பது என்று எண்ணிக்கொண்டிருக்கும் சமயத்தில், "நாங்களாயிருப்பதால், உங்களைப் போன்றவர்களை விட்டுவைத்திருக்கிறோம். போன உலகப் போர் நடைபெற்றபோது யுத்த நிதி திரட்டியும், போர்ப் பிரச்சாரம் செய்தும் வெள்ளைக்காரனுக்கு ஒத்துழைத்தவர்களல்லவா நீங்கள்? உங்களை வேறு நாடாக இருந்தால், உயிரோடுகூடவிட்டிருக்கமாட்டார்கள்! நாங்களாயிருப்பதால், விட்டுவைத்திருக்கிறோம்" என்கிற குரல் கேட்டது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் மனப்பாடம் செய்வது போல, இந்தக் குரல் திரும்பத் திரும்பக் கேட்டது.

'யார் இப்படி மனப்பாடம் செய்வது?' என்று எட்டிப் பார்த்தேன். அது, நிதியமைச்சர் சுப்பிரமணியத்தின் பங்களா. மாடியிலுள்ள ஒரு அறையில் அவரிருந்தார். இந்த வாசகத்தை ஏனிப்படி உருப்போடுகிறார், என்று கேட்டேன் வாசலில் காவலிலிருந்த ஒரு போலீஸ் தோழரை. "சட்டசபையில் பி. டி. ராசன் போன்றவர்களை ஒரு பிடி பிடித்தாராம் இன்று. அதை, மனைவியிடம் சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுகிறார்" என்றார் அவர். ஓகோ என்று எண்ணிக்கொண்டு, அந்தப் போலீஸ்காரரைப் பார்த்துக் கேட்டேன்:

"எத்தனை நாட்களாக இங்கே நீங்கள் காவல் புரிகிறீர்கள்?"

"அதை ஏன் கேட்கிறாய்! இவர் பங்களாவுக்குள் மரநாய் ஏறிவந்து மாடியில் குதித்து கலாட்டா செய்கிறதாம். அதனால், இரவும் பகலும் எப்போதும் காவல் காக்க வேண்டியிருக்கிறது" என்றார்.

"ஆமாம், ஒன்றிரண்டு மர நாய்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகக்கூட யாரோ சொன்னார்களே..." என்றேன், நான்.

"ஆமாமாம்!" என்றார், அவர்.

"எதால் சுட்டீர்கள்? இந்தத் துப்பாக்கியால்தானே?"

"ஆமாம்"

"இந்தத் துப்பாக்கி எத்தனை ஆண்டுகளாய் உங்களிடம் இருக்கிறது?"

"வெள்ளைக்காரன் காலத்திலிருந்து என் கையில்தானிருக்கிறது; அவன் கொடுத்துவிட்டுப் போனது இது" என்று சொல்லிக்கொண்டே, என்னைப் புன்சிரிப்புடன் பார்த்தார் அவர்.

புன்சிரிப்பின் பொருள், எனக்கென்ன, எல்லோருக்கும்தான் நன்றாகப் புரியுமே!

*

அங்கிருந்தபடி, மந்திரி மாணிக்கவேலரைப்போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று நினைத்தேன்.

அடையாறு ஓரமாக உள்ள அவருடைய பங்களா அமைதியோடு இருந்தது! அவரும் சோகமாக இருந்தார். 28-வயதுள்ள அருமந்த மகன் இறந்தால் யாருக்குத்தான் வருத்தமாக இராது. அவரைச் சந்தித்து ஆசிரியர் சார்பிலும் என் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டேன். அவருக்கேற்பட்ட துயரத்தை நினைத்தபோது உண்மையிலேயே என் மனம் துடித்தது! அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு கிளம்பலாம் என்று நினைத்தேன். கூடத்தில் மாட்டியிருந்த அவருடைய படம் ஒன்று கண்ணில்பட்டது. சூட்டும், கோட்டும் போட்டுக்கொண்டு பிரமாதமாயிருந்தார். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிபுரிந்த காலத்தில், காலம் சென்ற முத்தையா ஒரு அமைச்சராயிருந்தாரல்லவா? அவருக்குக் காரியதரிசியாக இருந்தபோது எடுத்த படமாம் அது. அதைப் பார்த்துக் கொண்டே, தியாகராய நகருக்கு நடையைக் கட்டினேன்.

*

நுங்கம்பாக்கம் செல்லும் பாதையிலுள்ள மாளிகையிலிருந்து காமராஜர் வெளியே வந்துகொண்டிருந்தார். என்னைக் கண்டதும் "ஆகட்டும், அவசியம் கவனிக்கிறேன்" என்றார். எனக்குப் பயமாகப் போயிற்று. நான் எதுவுமே கேட்காமலிருக்கும்போது, 'ஆகட்டும் கவனிக்கிறேன்' என்கிறாரே! முதலமைச்சரானது முதல் அவர் யாரைப்பார்த்தாலும் சொல்லுகிற முதற்சொல் இதுதான் என்று பிறகுதான் தெரிந்துகொண்டேன்.

"ஏன், அமைச்சர் அவர்களே, பி. டி. ராசன் போன்றோர் தேசிய இயக்கத்தில் சேராமலிருந்தமைக் காகச் சுட்டுப் போட்டிருப்போம்; நாங்கள் என்பதால் விட்டுவிட்டோம் என்று சொன்னாரே சுப்ரமணியம், அதைப்பற்றி, உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன்.

"இதில், என் அபிப்பிராயம் என்ன? மக்கள் அபிப்பிராயம் எதுவோ அதுவே என் அபிப்பிராயம்" என்று இரத்னச் சுருக்கமாகப் பதிலளித்தார்.

"மக்கள்தானே அவரையும் சுயம்பிரகாசம் போன்றவர்களையும் தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பினார்கள்" என்றேன்.

"ஆமாம், இருந்தாலும் அவர்கள் தேசத் துரோகிகள்தானே" என்றார், எங்கேயோ பார்த்தபடி.

"நீங்கள் ஆகஸ்டு நடத்திய போது அவர்கள் எல்லாம் சேராமலிருந்தார்கள் — அதுதானே உங்கள் குற்றச்சாட்டு"

"ஆமாம்! அதோடு, யுத்தப் பிரச்சாரம் செய்யவும் ஒத்துழைத்தார்களே"

"சரி! அப்படிப்பட்டவர்களிலே ஒருவர் தானே, மந்திரி மாணிக்கவேலர். ஓடோடி அழைத்து வந்தீர்களே, S. S. ராமசாமி அவர் மட்டும் எங்கேயிருந்தவராம்? R. K. சண்முகம் யார்? கோபால்சாமி அய்யங்கார் யார்? தேஷ்முக் எங்கேயிருந்தவர்? ஜெனரல் கரியப்பா..." என்று நான் முடிப்பதற்குள், அவர் போய் காரில் ஏறிக்கொண்டார்.

அங்கிருந்த ஒரு தோழர், நன்றாகக் கேட்டீர்கள் என்றார், என்னைப் பார்த்து, இன்னுமொன்று கேட்டிருக்க வேண்டும் என்றார்.

'என்ன?', என்றேன் நான். "இவர்கள்போற்றிப்புகழ்ந்து,முதல் கவர்னர் ஜெனரலாக ஏற்றுக் கொண்டார்களே அந்த ஆச்சாரியார் மட்டும் ஆகஸ்டிலே கலந்து கொண்டவரோ?", என்றார்.

"நீங்கள் யார்?", என்றேன்.

"நானொரு M. L. A.", என்றார்.

"இந்தக் கேள்வியைச் சட்டசபையிலே ஏன் நீங்கள் கேட்டிருக்கக்கூடாது?", என்று கொஞ்சம் கோபமாகக் கேட்டுவிட்டுப் புறப்பட்டேன்!!

*

# பேசுகிறார்! பேசட்டும்!!

காமராஜர் பேசுகிறார்!

காரசாரமாகப் பேசுகிறார்!

ஊரூருக்கும் ஓடிப் பேசுகிறார்!

பேசாமலிருந்தால் கல்லுப் பிள்ளையார் என்று என்னைக் கேலி செய்கிறார்கள், இதோ கேளுங்கள் நான் பேசுவதை என்று கூறிவிட்டுப் பேசுகிறார்.

நான் 'சும்மாவே' இருப்பேன், ஆனால் பேச ஆரம்பித்தாலோ, விடமாட்டேன், ஆமாம்! என்று கூறிக்கொண்டிருக்கிறார்.

கல்லுப் பிள்ளையார் அல்ல என்பதை எடுத்துக் காட்டிடக் காமராஜர் முயற்சி எடுத்துக்கொள்வது கண்டு காங்கிரஸ் அன்பர்கள் களிப்புக் கூத்தாட வேண்டும் என்பதற்காகவே பேசுகிறார்.

'கனம்' சுப்ரமணியமும் அமைச்சர் பக்தவத்சலமும் மட்டும்தானா பேச வல்லவர்கள், எனக்கென்ன அந்த 'வித்தை' தெரியாதா, இதோ கேளுங்கள் நான் பேசுவதை என்று காட்டுவது போலப் பேசுகிறார்.

சேலத்தில் பேசுகிறார், தருமபுரியில் பேசுகிறார், அரூர் அவர் பேச்சைக் கேட்கிறது, காலையிலும் பேசுகிறார் மாலையிலும் பேசுகிறார், காங்கிரஸ் நண்பர்கள் கைதட்டி மகிழக் கண்டு பேசிக்கொண்டே இருக்கிறார்.

அரசன் மகன், வயது ஏழாகியும் எட்டாகியும் பேசாமலிருந்தான். இளவரசன் 'ஊமை' என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

மன்னரும் அவன் மனைத வென்றவளும் மெத்தமனவருத்தப் பட்டார்கள்.

இளவரசனின் 'அத்தை, விதவை — அந்த அம்மைமட்டும் ஆரூடக்காரன் சொல்லியிருக்கிறான், என் கண்மணி ஊமையல்ல, ஏதோ 'கிருஹக்கோளாறினால் இப்படி வாயடைத்துக் கிடக்கிறது, வேளை வந்ததும் பேசப் போகிறான் பாருங்கள்!—என்று நல்லவாக்கு கொடுத்தபடி இருந்து வந்தார்.

ஆரூடக்காரன் குறித்த வேளையும் வந்தது — அரச அவை கூடிற்று —அலங்காரம் செய்து கொண்டு இளவரசன் வந்தமர்ந்தான்.

பேசப்போகிறான், பேசப்போகிறான், ஊமை என்று ஊரார் கேலி செய்தார்களே, அந்த இளவரசன் இப்போது பேசப்போகிறான் கேளுங்கள் என்று கூறினர் ஆரூடக்காரனுடைய ஆதரவாளர்கள்.

வேளை வந்தது!

இளவரசன் பேசினான்!!

"அம்மா!—" என்று அழைத்தான் வாய்திறந்து — அவை 'ஆஹாஹாரம்' போட்டது—ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டார் அரசியார்—என்மகனா ஊமை! என்று கேட்பதுபோல மன்னன் கெம்பீரமாக அவையினரைப் பார்த்தான்—என் வாக்குப் பொய்க்குமோ என்று ஆரூடக்காரன் கண்ணால் கேட்டான்—அத்தையோ வாடா! என் கண்ணே! என்று இளவரசனை வாரி அணைத்துக்கொண்டாள்.

"அம்மா!"—என்று இளவரசன் கூறிவிட்டு, அத்தையைச் சுட்டிக்காட்டி, "அம்மா! அத்தை கழுத்து போல உன் கழுத்து எப்போது ஆகும்?" என்று கேட்டான்.

**அத்தை விதவை!**

அம்மா, அத்தைபோலாகவேண்டும் என்ற அற்புதமான 'ஆசை'யை வெளியிட்டான் இளவரசன்.

இளவரசன் பேசிய முதல் பேச்சு இது!

பேசவில்லை, பேசவில்லை, ஊமையோ பாபம்—என்று பலரும் கேட்டனர். இளவரசன் பேசினான்,

அம்மா, அத்தை கழுத்துபோல உன் கழுத்து எப்போது ஆகும்? என்று பேசினான்.

காமராஜர், பேசுகிறார்; கல்லுப் பிள்ளையார் என்றல்லவா கேலி செய்கிறார்கள் — இதோ பேசுகிறேன் கேளுங்கள் என்று கூறிவிட்டுப் பேசுகிறார் – இளவரசன் பேசினானல்லவா, அதுபோலப் பேசுகிறார்.

"ஐயோ! ஊமையாக இருந்துவிட்டிருந்தாலே பரவாயில்லை, வாயைத் திறந்ததும், இப்படி வகை கெட்ட முறையிலா பேச வேண்டும் இந்த இளவரசன்— என்று அரச அவையினர் எண்ணித் திகைத்தது போலவே "அட இழவே, இந்த ஆசாமி கல்லுப் பிள்ளையார்போலப் பேசாமலிருந்திருந்தாலே பரவாயில்லை போலிருக்கிறதே—பேசி, இப்படிப்பேதைமையை வெளியாக்கிக் கொள்கிறாரே, என்று காங்கிரஸ் நண்பர்களே, பச்சாதாபப்படும்படியாகப் பேசிக்கொண்டே இருக்கிறார், காமராஜர்!

பேசட்டும், பேசட்டும்—இப்போது பேசாமல் வேறு எப்போது தான் பேசுவது! இப்போதுதானே, ஊர்ப்பிரமுகர்களும் வணிகக் கோமான்களும், அதிகாரிகளும் அறிவாளர்களும் வந்தமருகிறார்கள் அவையில்—இப்போது பேசாமல், வேறு எப்போதுதான் பேசுவது?

அதோ கலெக்டர் நிற்கிறார்— கண்களிலே கனிவு வழிய.

போலீஸ் அதிகாரிகள் படையுடன் புடை சூழ நிற்கிறார்கள்— எங்கும் 'இருமலோ தும்மலோ' கூட எழாதபடி பார்த்துக்கொள்ள,

அடுத்த தேர்தலுக்கு நான்— என்று மனுச் செய்துகொள்ளச் சீமான்கள் வந்திருக்கிறார்கள்,

(17-ம் பக்கம் பார்க்க)

# வில் வீரன்—வில்லியம் டெல்

கள்ளங் கபடமற்ற உள்ளம், பாடுபட்டுப் பிழைக்கும் பண்பு; எவ்வளவு கடினமான வேலையையும் எளிதாகச் செய்யும் ஆற்றலை அளிக்கும் உடற்கட்டு; எதையும் தாங்கும் இதயம் — வயோதிகப் பருவமுமல்ல, ஆற்றோரம் காத்திருந்து அழகியுடன் அந்தி நேரம் உரையாடிவிட்டு, இரவெல்லாம் இன்பக் கனவு காணும் இளைஞனுமல்ல; குடும்பப் பொறுப்பினை ஏற்று, அக்கடமையைக் களிப்புடன் நிறைவேற்றிக்கொண்டு வரும் நடுத்தர வயதினன் — மலை மகன், **வில்லியம் டெல்**.

நல்ல உயரம், அதற்கேற்ற பருமன். அகன்ற மார்பு; ஒளிவிடும் கண்கள்; புன்னகை எப்போதும் தவழ்ந்தபடி இருக்கும்; புள்ளினம் போலப் பாடிடவும் செய்வான் சில வேளைகளில்.

அன்று மாலை, அப்படித்தான் ஆனந்தமாக ஏதோ பண் இசைத்துக்கொண்டு வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தான், **வில்லியம் டெல்**.

சந்தையில், மான் தோலை நல்ல விலைக்கு விற்று, அதில் கிடைத்த பணத்தைக்கொண்டு, வீட்டுக்குத் தேவையான பண்டங்களை வாங்கிக்கொண்டு திரும்புகிறான்—மலையடிவாரத்திலே குடில் இருக்கிறது, அங்கு அவனுக்குக் குதூகலம் காத்துக்கொண்டிருக்கிறது.

மலை சூழ்ந்த எழில் நாடு சுவிட்சர்லந்து—இன்றுபோலவே அன்றும் அந்நாட்டின் எளிமையே ஓர் இனிமை பயப்பதாகவும், இயற்கையே அணியாகவும் அமைந்திருந்தது. மலையுச்சிகளிலே பனியும், மலை அடிவாரத்திலே பசுமையும், நிறைந்த சுவிட்சர்லாந்து நாட்டில், மனையெலாம் மகிழ்ச்சி பொங்கும் விதமான வாழ்க்கையே அமைந்திருந்தது. மலைக் காற்று உண்டு மகிழ்ந்த அம் மக்கள், தன்னாட்சியின் மாண்பினைப் போற்றி வந்தனர்; பிற நாடுகளிடமிருந்து பொருள் பல பெறுவதற்காக அலைவதில்லை, தம் நாட்டின்மீது அடிமைத்தனம் படருவதைச் சகித்துக்கொள்வதுமில்லை. எங்களுக்கு எங்கள் நாடு போதும்—இயற்கையின் கவர்ச்சியும் எமது உழைப்பும் துணைநிற்கின்றன, பிறர்மீது ஆதிக்கம் செலுத்தும் பெரும் பிழையும் புரியமாட்டோம், பிறர் எம் நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துவதையும் பொறுத்துக் கொள்ளமாட்டோம், என்ற உறுதியும் உயர் நோக்கமும் கொண்டவர்களாக விளங்கிய சுவிட்சர்லாந்து மக்களின் இயல்புகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக இருந்தான் **வில்லியம் டெல்**.

வில் வித்தையில் வல்லவன்; குறி தவறுவதில்லை; நாட்டவர் அதனைப் போற்றினர்.

அதுபோன்றே கடல் சிறி, கலத்தைத் தாக்கும்போது கலத்தைத் திறம்படச் செலுத்தி, கரை கொண்டுவந்து சேர்ப்பதிலும், டெல், வல்லவன்.

இந்தத் திறமைகளைக் காட்டி. பரிசுகளும் விருதுகளும் தேடிக்கொண்டில்லை; உழைத்தான், வாழ்ந்துவந்தான். கடலிலே மீன் கிடைக்கும், காடுகளில் மான் கிடைக்கும், மலைக்காற்றிலே மணம் நிரம்பக் கிடைக்கும், மனையிலே நிம்மதி கிடைத்தது; வில்லியம் டெல், மகிழ்ச்சியுடன் வாழ்க்கையை நடத்திவந்தான்.

ஆனால்......!! நாடு, ஆதிக்கக்காரர்வசம் சிக்கிவிட்டது — ஆஸ்திரிய நாட்டவரின் ஆணவ ஆட்சி, இரும்புப்பிடிபோலாகி விட்டது. மலைநாட்டு மக்கள், வஞ்சகம் அறியாதவர்கள் — ஆஸ்திரிய நாட்டவரின் அரசியல் ஆதிக்கமுறையால் ஏற்பட்டுவிட்ட அடிமைத்தனத்திலிருந்து விடுபட, தந்திரத் திட்டம் ஏதும் அவர்களால் வகுத்திட இயலவில்லை.

இது அநீதி!
இது அக்ரமம்!
இது அவமானம்!

என்று, மலைநாட்டு மக்களின் மனம் குமுறிற்று—எத்தனை எழிலுடன் ஓங்கி வளர்ந்து நிற்கிறேன், என்னைக் கண்டும் உங்கட்கு நிமிர்ந்து நின்றிடும் ஆற்றல் வராது போனது ஏன்? என்று கேட்பது போலக் குன்றுகள் விளங்கின. விடுதலையைப் பெற்றாகவேண்டும், ஆதிக்கம் புரிவோரின் பிடியிலிருந்து விடுபட்டாகவேண்டும், வீரம் விளையும் கழனி இம்மலைநாடு; வீணராகி உழல்வது அடுக்காது என்று வில்லியம் டெல், தன் நண்பர்களிடம் கூறிவந்தான். குனிந்து கிடக்கிறார்கள், குட்டக் குட்டக் குனிந்து கிடப்பார்கள் என்று எண்ணினர் கொடுங்கோலர்கள். மலை ஏறவும் மடுவில் நீந்தவும், காடுகளில் வேட்டையாடவும் கானாறுகளில் விழுந்து புரளவும்மட்டுமே அறிவர் இந்த மக்கள், களத்தில் புகுந்து வெற்றிபெறும் வகை அறியமாட்டார்கள் என்று எண்ணினர் ஆணவக்காரர்கள். இந்த அடிமைத்தளைகளை நொறுக்குவதா முடியாத காரியம், எத்தனை கடுமையான பெருங்காற்று வீசினாலும் கெம்பீரம் குன்

றுமல் நிற்கும் மலைகள் சூழ்ந்த நாடல்லவா எமது தாயகம், இந்த ஆதிக்கப் புயலைக் கண்டா நாங்கள் நிலைகுலைந்து போய்விடுவோம்—விடுதலைப் போர் எழுந்தே தீரும், வெற்றி எமக்குக் கிடைத்தே தீரும் என்று எண்ணியோ என்னவோ, வில்லியம் டெல், கவலையற்று, கீதம் இசைத்தவண்ணம் வீடு திரும்பிக்கொண்டிருந்தான்.

ஏ! யாரது! நில்! — ஒரு ஆணவக் குரல் கேட்டது; ஒரு ஆஸ்திரிய சிப்பாய்! வில்லியம் டெல்லின் கரத்தைப் பிடித்திழுத்தான்.

"போர் வீரரே! என்னை நிற்கச் சொன்னகாரணம் என்ன?'' என்று டெல், மரியாதை தவறாமல், ஆனால் நடுங்காமல் கேட்கிறான்.

"நிற்கச் சொன்ன காரணமா? புத்தி புகட்ட! ஏடா! மூடா! எதிரே தெரிவது என்ன?" என்று கேட்டான் போர் வீரன்.

எதிரே ஓங்கி வளர்ந்த ஓர் கம்பத்தின்மீது, ஆஸ்திரிய நாட்டு ஆதிக்கச் சின்னமாக, அந்நாட்டுத் தொப்பி தொங்கவிடப்பட்டிருந்தது.

"வணங்காமல் செல்கிறாயே! அவ்வளவு கர்வமா உனக்கு?"

"வணங்கவேண்டுமா! தொப்பியையா!"

"என்னடா ஏளனம் பேசுகிறாய்? எம்மை யார் என்று அறியாயா?"

இதற்குள், அந்த வட்டாரத்தில் கவர்னராக வீற்றிருந்து கொடுமை பல புரிந்துகொண்டுவந்த கெஸ்லர் என்பான் வந்துவிட்டான்.

பண் இசைத்தபடி பாதையிலே சென்றுகொண்டிருந்த வில்லியம் டெல்லை, தடுத்து நிறுத்தி, தருக்குடன் பேசிக்கொண்டிருந்தவனுக்குத் துணையாக கெஸ்லரின் படை வந்துவிட்டது.

"ஓஹோ! வில்வீரனே!" என்று கெஸ்லர் கேலியுடன் கேட்டுவிட்டு, "அடிமையான பிறகும், இவன் நிமிர்ந்துநிற்கும் கெம்பீரத்தைப் பார்! கட்டளை தெரியாதா, கருத்தற்ற காட்டானே! எமது ஆதிக்கச் சின்னத்துக்கு வணக்கம் கூறு!" என்றான்.

"ஒரு தொப்பிக்கா! வெறும் தொப்பிக்கா! அதன் முன்பு வீழ்ந்து வணங்க வேண்டுமா!" என்று கேட்டான் வில்லியம்டெல்.

வீரப்புயல் வீசுவதற்கான அறிகுறி என்றுணர்ந்து பலர், சூழ நின்று நிலைமையைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"அப்பா! அப்பா!" என்ற குரல் கேட்டது; ஆணவக்காரனுக்கு என்னபாடம் கற்பிக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான் வில்லியம், அந்தச் சிந்தனையைக் கலைத்திட வந்தான் சிறுவன்.

"உன் மகனோ?"— செருக்குடன் கேட்கிறான் கெஸ்லர் — அவனுடைய ஆட்கள், சிறுவனைப்பிடித்திழுத்துவருகிறார்கள்.

"ஐயா! ஐயா! என் மகனை ஒன்றும் செய்யாதீர்கள்...'' தந்தையின் குரல்.

"ஒரு கெடுதியும் உன் மகனுக்கு என்னால் ஏற்படாது—ஏதாவது இந்தப் பயலுக்கு ஆபத்து ஏற்படுமானால், உன்னால்தான் ஏற்படும் ......" என்று புதிர்போட்டுவிட்டு, "ஏய்! இந்தப் பயலை இழுத்துச் சென்று அதோ அந்த மரத்திலே கட்டிப்போடுங்கள். ஒரு ஆப்பிள் பழத்தை அந்தப் பையனுடைய தலைமீது வையுங்கள்" என்றான்; டெல் திகைத்து நின்றான்; பாசம் மேலோங்கி நிற்கும்போது, வீரம் சிறிதளவு தலைமறைவாகத்தானே இருக்கும்.

"இந்த மலைநாட்டிலே, குறி தவறாமல் அம்பெய்வதிலே உனக்கு நிகரே கிடையாதாமே, கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது பரீட்சித்துப் பார்க்கப் போகிறேன். எமது ஆதிபத்தியத்தை மதியாமலிருந்த குற்றத்துக்காக உனக்கு மரண தண்டனை தரவேண்டியதுதான் முறை, ஆனால் இன்று என்னமோ என் மனதிலே ஓர் இன்பம் துள்ளுகிறது—உன்போன்ற கசடனுக்கும் கருணை காட்டவேண்டும் போலிருக்கிறது. ஆனால், உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள உனக்கு வசதி தருகிறேன். அபாரமான திறமைகொண்டவனாமே நீ, ஏதோ எடு வில்லினை, தொடு அம்பு, விடு அந்தப் பழத்தின்மீது —குறி தவறினால் உன் உயிர் வாங்கப்படும் — சிறுவன், பாபம், அவனும் செத்துத்தான் போவான். குறி தவறாமல் அம்பு பாய்ந்து. பழத்தைமட்டும் துண்டாடினால், உன் திறமைக்கு மெச்சி உனக்கு உயிர்ப்பிச்சை தருகிறோம். எடு வில்லினை'' என்றான், கொடுங்கோலன்.

இப்படி ஒரு ஆட்டத்தான பரீட்சையா? என் குலக்கொடி—அருமந்த மகன்—துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தினன்—அவன் தலைமீது பழம் — அதைக் குறி பார்த்து அம்பு வீசுவதா—அம்மம்மா! ஒரு துளி தவறினால்? எண்ணும்போதே நெஞ்சுவெடித்துவிடும்போலிருக்கிறதே; இரக்கமற்றவனே! என்னைக்கொண்டே என் மகனைச் சாகடிக்கவா இந்தச் சாகசம் பேசுகிறாய்? மரத்தின் உச்சிக்கிளையில் குலுங்கும் பழக்கொத்தைக் கீழே விழச் செய்கிறேன், என் திறமையால். துள்ளி ஓடும் மானாயினும்சரி, துரத்திக்கொண்டு தாக்கவரும் காட்டுமிருகமாயினும் சரி, அம்பால் வீழ்த்திக் காட்டுகிறேன் — அருமை மகனை எதிரே மரத்தில் கட்டி வைத்துவிட்டு, அவன் தலைமீது ஒரு பழத்தை நிறுத்தி, அதிலே அம்பு பாய்ச்சச் சொல்வதா? ஐயோ! அந்தப் பாலகனைக் கண்டால், என்மனம் பதறுவதால், அம்புதான் குறி தவறாமல் செல்லுமா, வில்லையே என் கரம் தாங்காதே, தந்தையின் கை அம்பால் தனயன் கொல்லப்பட்டான் என்றோர் இரத்த வரலாறு தீட்டவா இந்தச் சூழ்ச்சி! வேண்டாம்! வேண்டாம்! இந்த விபரீதம் வேண்டாம்! மகனைக் கொல்லத் தந்தையை ஏவாதே, மாபாவியாகாதே!—"

வில்லியம்டெல், நீதி கேட்டான் —இரக்கம் கேட்டான்—இறைஞ்சினான்—அந்த மனிதமிருகம் இணங்கவில்லை.

உன் உயிர்—அல்லது அம்பெய்யும் வித்தை! என்று கட்டளையிட்டது.

"சரி! செருக்குமிக்கவனே! என் உயிர்போகட்டும் — மரண தண்டனையை ஏற்றுக்கொள்கிறேன்'' என்றான் வில்லியம் டெல்.

எந்தத் தந்தையும்பேசும் மொழியில்தான் டெல் பேசினான்—எந்த எதேச்சாதிகாரிக்கும் ஏற்படும் ஆணவம்தான் கெஸ்லருக்கும் ஏற்பட்டது.

"சாகத் துணிந்துவிட்டாயா! சபாஷ்! ஆனால், அன்புடன் நீ வளர்த்துவரும் இந்த மகன், அனாதையாகி, அல்லற்படுவானே —அதை எண்ணிப்பார்க்க உன் இதயம் இடம்தரவில்லையோ!! கன்னெஞ்சக்காரனான உனக்குத்தான் அந்த எண்ணம் சுரக்காமற்

போயிற்று, எனக்கு அவ்விதமல்ல, நீ இறந்துபட்ட பிறகு இச்சிறுவன், மெத்த வேதனைக்கு ஆளாக நேரிடும் — அது பெரும்பாபம் — ஆகவே, உனக்குப் பிறகு, இந்தச் சிறுவன் உலகில் இருத்தல் கூடாது—ஆகவே நீ சாகுமுன்பு உன் செல்லப்பிள்ளை கொல்லப்படுவதைக் கண்ணாரக் கண்டுவிட்டு; பிறகு நிம்மதியாக நீயும் சாகலாம்"

கெஸ்லர் இத்தகைய கெடுமொழி கூறுபவன்போல, வில்லியம் டெல்லை உற்று நோக்கியபடி, "உன் மகன் முதலில் கொல்லப்படுவான்—பிறகு, நீ" என்று உத்தரவிட்டான். என்ன செய்வான் வில்லியம்டெல்! காதகன் சொன்னபடியே செய்துவிடக் கூடியவன் என்பதை அறிந்தான்—எனவே, ஆபத்தான பரீட்சை எனினும், அதில் ஈடுபட்டேனும், மகனைக் காத்தாகவேண்டும் என்று துணிந்தான். அம்புறாத் துணியிலிருந்து கூரிய இரு அம்புகளைத் தேர்ந்தெடுத்தான் — பாலகன் தலைமீதிருந்த பழத்தைக் குறிபார்த்து அம்பு விடுத்தான் — சூழ இருந்தோர் பயத்துடன் கவனித்த வண்ணம் இருந்தனர்.

பலே! பேஷ்! என்று கூறியபடி, கெஸ்லர், வில்லியம் முதுகிலே தட்டிக்கொடுத்தான் — இம்மி பிசகினாலும், ஒரு சிறு அசைவோ, நடுக்கமோ ஏற்பட்டிருந்தாலும், அம்பு, சிறுவனின் உயிரைக் குடித்திருக்கும்; வில்லியம்டெல் விடுத்த அம்பு துளியும் குறி பிசகாமல், பழத்தின்மீது பாய்ந்தது—பழம் இருதுண்டுகளாகிக் கீழேவீழ்ந்தது, அம்பு மரத்தில் சென்று தைத்துக்கொண்டது. சிறுவன் உயிர் தப்பினான், டெல், பரீட்சையில் வெற்றிபெற்றான். குறிதவறாது அம்பு எய்வதிலே வல்லவன் என்ற கீர்த்தி நிலைத்தது.

கொடுங்கோலன் கெஸ்லர், வில்லியம்டெல்லின் திறத்தைப்பாராட்டினான், ஆனால் உள்ளத் தூய்மையுடன் அல்ல.

"சரி, வில்லியம்! இரண்டு கூரிய அம்புகளை எடுத்துவைத்தனையே, ஏன்?" என்றோர் கேள்வி கேட்டான்.

உள்ளொன்றுவைத்துப் புறம் பொன்று பேசும் வாடிக்கை கிடையாது வில்லியம்டெல்லுக்கு, எனவே அவன் "என் மகனுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டிருந்தால், என் இரண்டாவது அம்பு உன் இதயத்தைத் துளைத்திருக்கும்" என்று பதிலிறுத்தான்.

வெகுண்டான் கொடுங்கோலன். "அப்படியா! என்னைக் கொல்லவா துணிந்தனை? ஆம், ஆம்! உன் போன்றவர்கள் உள்ளத்தில் எப்போதும் இத்தகைய கெடுமதிதான் நெளியும். உன்னைச் சும்மா விட்டுவைக்கக்கூடாது. உன்னைக் கொல்லப்போவதில்லை — உயிர்ப் பிச்சை தருவதாக வாக்களித்துவிட்டேன், அதை மீறப்போவதில்லை, ஆனால் உன்னை நடமாடவிடப்போவதில்லை" என்று கொக்கரித்தான். தன் படைவீரர்களை ஏவி, "பிடித்திழுத்து வாருங்கள் இந்தப் பேயனை. சிறையில் தள்ளினால்தான் இச் சிறுமதியாளனுக்குள்ள கெடுமதி ஒழியும்" என்று கூவினன் — வில்லியம் டெல், அஞ்சா நெஞ்சுடன் காரியமாற்றித் தன் திறமையை எடுத்துக்காட்டிய வில்வீரன், பிடித்திழுத்துச் செல்லப்பட்டான்.

கவர்னராக அமர்ந்திருந்த காதகனுடைய கப்பலில் கொண்டுபோய் அடைத்தனர் ஆற்றல்மிக்கோனை. கலம் கிளம்பிற்று. கண்டோர் கண்ணீர் வடித்தனர். ஒரு குற்றமும் செய்தானில்லை, எனினும் அவனுக்கு இக்கொடுமை இழைக்கப்படுகிறது. தாயகம் அடிமைப்பட்டிருப்பதனாலன்றோ, தருக்கர் இத்தகைய கொடுஞ்செயலைச் செய்கின்றனர்! என்றெல்லாம் எண்ணி எண்ணி மக்கள் விம்மினர். கலமோ சென்றுகொண்டிருந்தது. சுவிட்சர்லந்து நாட்டு மக்களின் விடுதலைப் பேரார்வமே கிளம்பியது போலப் பெரும்புயல் கிளம்பி கலத்தை அலைக்கழித்தது. அடிமைப்பட்ட மக்களை அடக்குமுறை கொண்டு அடக்கமுடிந்தது ஆஸ்திரிய நாட்டு அதிகார வர்க்கத்தால். ஆனால் புயல் கொதித்தெழுந்தபோது, கலத்தை எதிர்த்துச் செலுத்த இயலவில்லை. எந்த விநாடி கலம் சுக்குநூறாகுமோ என்ற கிலி பிடித்துக் குலுக்கியது. சுவிஸ் மக்களுடைய கோபப்புயலைச் சமாளித்துவிட்டோம், இந்தச் சூறாவளி பழி தீர்த்துக்கொள்ளும்போலிருக்கிறதே என்றெண்ணினர்—பீதி கொண்டனர்.

வில்லியம் டெல், வில் வித்தையில்மட்டுமல்ல, கடும்புயலையும் எதிர்த்துக் கலம் செலுத்துவதில் வல்லவன், அவன் முயன்றால், ஆபத்தைத் தவிர்க்கலாம், அனைவரும் தப்பிப் பிழைக்கலாம் என்று கெஸ்லரிடம் கூறினர். எந்த வில்லியம் டெல், சித்திரவதைக் கூடத்துக்கு இழுத்துச் செல்லப்படுகிறானோ, அவனிடம் மன்றாடி, அவன் உதவிபெற்றால்மட்டுமே உயிர்தப்பலாம் என்ற நிலை பிறந்தது.

கட்டுகளை அவிழ்த்துவிடுங்கள்—கலத்தைச் செலுத்தச் சொல்லுங்கள் — என்று கட்டளையிட்டான், காதகன்.

அந்த விநாடியில், வில்வீரன், என்னென்ன எண்ணினானோ! என் தாயகத்தை அடிமைகொண்டு, எம்மை இம்சித்து, இழிநிலையில் தள்ளிய இந்தக் கொடியவர்கள், சூறாவளிக்கே பலியாகட்டும்—இவர்களைக் காப்பாற்றக்கூடாது, நாசமாகட்டும் நாசகாலர்கள். தாயகத்தின் தன்மானத்தை அழித்தவர்கள் ஒழியட்டும்! — என்றெல்லாம் ஒருகணம் எண்ணியிருப்பான், மறுகணமோ, இந்தக் கலத்தில் உள்ளோர்மட்டும்தானா கொடியவர்கள் —இவர்கள் ஒழிந்ததும் கும்பல் கும்பலாகக் கிளம்பாவோ வேறு படைகள்? தாயகம் போர்க்கோலம் பூண்டு, கணவாய்கள் பாசறைகளாகி, குன்றுகள் கோட்டைகளாகி விடுதலைப்போரில் நமது வீரர்கள் ஈடுபட்டலல்லவா இந்த வெறியர்களை விரட்டி அடித்து, பாடம் கற்பித்து, பாரிலே, சுவிட்சர்லந்துக்குப் பெரும்புகழ் தேடவேண்டும். சூறாவளிக்குப் பெருமை தருவதா! சுதந்திரப் போரிட வழியில்லாத மக்களா சுவிட்சர்லந்தில் உள்ளவர்கள்! அத்தகைய இழிமொழியை நாடு ஏற்கலாகாது—எனவே கலம் சூறாவளியால் சுக்குநூறாக விடக்கூடாது—சுதந்திரப் போரில் சிக்கி இந்தச் செருக்கு மிக்கவர்கள், ஆணவம் நொருக்கப்பட்டு, விரண்டோடவேண்டும், விடுதலைக் கொடியை நாம் பறக்கவிடவேண்டும், அதுதான் கீர்த்திமிக்க காரியம் என்றெல்லாம் எண்ணியிருப்பான். சூறாவளியில் சிக்கிய கலத்தைத் தன் திறமையால் செலுத்தலானான்.

ஆபத்து இனி இல்லை, சூறாவளியினின்றும் தப்பினோம், கலம் கரை சேரும் என்பதறிந்து மகிழ்ச்சிதான் கொண்டனர். எனினும், அந்த மமதையாளருக்கு, மற்றோர் வகையிலே மனக் குடைச்சல். இந்த அடிமையல்லவா, நம்மைக் காப்பாற்றிக் கரைசேர்க்கிறான் —

எவன் நம்முடைய சவுக்குக்கு இரையாகி, நமது சித்திரவதைக்கு இலக்காகி, நமது சிறையில் அடைபட்டுக் கிடக்கவேண்டியவனே, அவனல்லவா நமக்கு உயிர்ப் பிச்சை கொடுப்பவனாகிறான்! கேவலமல்லவா இது. எவ்வளவு ஆணவம் ஏற்படும் இவனுக்கும், இவன் நாட்டினருக்கும்? வில் வித்தையில் மட்டுமல்லவே, கலம் செலுத்துவதிலும் திறமை மிக்கவனாக இருக்கிறானே—அடிமை—இவனுக்கு இத்துணை ஆற்றலிருப்பதா! இத்துணை ஆற்றல் இருப்பவனை விட்டுவைப்பது, பேராபத்தாக அல்லவா முடியும்? என்றெல்லாம் எண்ணினர், ஆஸ்திரிய எதேச்சாதிகாரிகள்.

வில்லியம் டெல், கலத்தை மட்டும் செலுத்திக்கொண்டில்லை, தன் சிந்தனையையும் செலுத்திக்கொண்டிருந்தான்.

அடிமைத்தனத்தை எதிர்த்தொழித்தாகவேண்டும், இல்லையானால், தந்தையைக்கொண்டு மகனைக் கொல்லச் செய்வர் தருக்கர்—திறமையைக் கண்டால் திகில் கொண்டு, சிறையில் தள்ளப்பார்ப்பர். இனித் தாயகம் தருக்கரிடம் இருத்தலைச் சகித்திடக் கூடாது. எத்துணை எழில் நிரம்பியது எமது தாயகம்! குன்றுகளின் வனப்பும், நீர்நிலையங்களின் நேர்த்தியும், காடுகளின் கவர்ச்சியும், கவிவாணர்களுக்கே விருந்தாக அமையுமே. இத்தகைய இன்பபுரிக்கு இழிவும் பழியும் வந்துற்ற பிறகும், எதிர்த்தொழிக்காமல், குன்றெடுக்கும் நெடுந்தோளைக் குலுக்கிக் கொண்டிருப்பதா! கூடாது, கூடாது! எதிர்த்தாக வேண்டும்! எதிர்த்திடும் ஆற்றலும், எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடித்திடும் திறமும் நமது உடன்பிறந்தார்க்கு நிரம்ப உண்டு! இதிலென்ன ஐயம்! நீதி நம்பக்கம் நிற்கிறது, வேறெந்தச் சக்தி நம்மைத் தாக்கினும் பயம் ஏன்! — என்று பலப் பல எண்ணினான்போலும்! எனவேதான், கலம் கரை அருகே செல்லும் சமயமாகப் பார்த்து, கலத்தை விட்டுவிட்டு, அருகே தெரிந்த பாறைமீது தாவிப் பாய்ந்து அடவியில் புகுந்தான்—கலம் தத்தளித்தது.

“வந்துவிட்டேன் நண்பர்களே! இதோ வந்துவிட்டேன்! கச்சையை வரிந்து கட்டுங்கள், காதகரின் ஆட்சியை எதிர்த்தொழிப்போம், கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு கிளம்புங்கள்! தாயகம் தந்த நெஞ்சு உரமும், வழிவழி கிடைத்த நேர்மைத் திறமும், மலை வளம் தந்த வீரமும், வீண் போகாது. விசாரத்தை விட்டொழியுங்கள், விடுதலைப்போரில் ஈடுபடும் காலம் வந்துவிட்டது. வெற்றிநமக்கே — என்னைப் பாருங்கள். எனக்கு வந்துற்ற ஆபத்து சாமான்யமா? என் கரத்தாலேயே என் மகனைச் சாகடிக்கச் சதி செய்தனர். முடியவில்லை...என் அம்பு பறந்து சென்றது, பழத்தை இரு துண்டுகளாக்கிற்று —பாலகன் தப்பினான்! குறி தவறவில்லை, துளியும்! நாட்டு விடுதலைப் போரிலும் இதேதான், நமது குறி தவறப் போவதில்லை. சித்திரவதைக்கூடத்துக்கு இழுத்துச் சென்றனர் என்னை, இப்போது அவர்கள் சித்திரவதைக்கு ஆளாகிவிட்டனர்—சூறாவளி அவர்களைத் தாக்குகிறது —அழிவு அவர்கட்குத் திண்ணம் நாட்டு விடுதலை கோரி நாம் போர்ச் சூறாவளியைக் கிளப்பிவிட்டால். நம்மால் முடியும். நாம்தான் முயன்றாகவேண்டும் — ஏனெனில் மீட்கவேண்டியது நமது தாயகத்தை!

எப்படியெப்படி வீரம் ஊட்டினானோ-என்னென்ன எடுத்துரைத்தானோ அந்த வில்வீரன்—கொடுமை கண்டு குமுறிக் கிடந்த மக்கள் கொதித்தெழுந்தனர்—அடக்குமுறை கண்டு அஞ்சிக் கிடந்த மக்கள் ஆர்த்தெழுந்தனர் —கண்ணீர் சிந்திக் கிடந்த மக்கள் சீறிப் போரிடக் கிளம்பினர்—ஆஸ்திரியப் படை சின்னாபின்னமாயிற்று. அம்புகளும் பிற ஆயுதங்களும் சூறாவளியாயின. தோற்றோடிற்று ஆஸ்திரியப் படை; சுவிட்சர்லந்து நாட்டு அடிமைத்தனம் படுசூரணமாயிற்று—சுதந்திரக் கொடி பறக்கவிடப்பட்டது, தாயின் மணிக்கொடியைப் பறக்கவிட்டனர். இன்றும் உலகினர் கண்டு வியந்து புகழத்தக்க நிலையில், குடிஅரசுக்கோர் அணிகலனாய்த் திகழ்கிறது, சுவிட்சர்லந்து.

சுவிட்சர்லந்து நாட்டு விடுதலைப் போர்க் காவியத்திலே, வில்லியம் டெல்பற்றிய குறிப்பினை, வரலாற்று ஆதாரம் பெற்றதல்ல என்றுகூறுவர், எனினும், இன்றுவரையில் சுவிஸ் மக்கள் உள்ளத்திலே உணர்ச்சியை ஊட்ட இந்த ஆற்றல் விளக்கக் காதை பயன்பட்டு வருகிறது.

வில்லியம் டெல், வெறும் கற்பனை என்றே கருதினாலுங்கூட — எவ்வளவு சுவையும் பயனும், இலட்சியமும் அளித்திடும் கற்பனை என்றெண்ணும்போது உள்ளம் மகிழத்தான் செய்கிறது.

வில் வீரன், நமது நாட்டுக் கற்பனையில் பல உண்டு! குறி தவறாத வீரர் பலர்பற்றிப் புராணங்கள் உள்ளன. ஒன்றிலாவது, நாட்டுப் பற்று, விடுதலை ஆர்வம், கொடுங்கோலை எதிர்த்திடும் வீரஉணர்ச்சி இவைபற்றிய குறிப்புக் காண்கிறோமா? என் தாயகம் அடிமைப்பட்டிருந்த நாட்களிலே, இந்த வில் வீரனுடைய திறத்தால், ஆர்வத்தால், விடுதலைப் போரிலே வெற்றி கிடைத்தது என்று கூறி பெருமைப்படமுடிகிறதா?

ஏகலைவன், பாபம், வில்வித்தையில் அற்புதமான ஆற்றல் பெற்றுக் கண்ட பலன் என்ன? கட்டைவிரலை இழந்தான். கட்டைவிரலைக் காணிக்கையாகக் கேட்டிட ஒரு குரு இருந்தார், இந்தப் புண்யபூமியில்! சுவிட்சர்லந்து, தன் நாட்டு வில் வீரர்களை, ஏகலைவன் ஆக்கவில்லை—விடுதலைப்போரில் வெற்றி தேடித் தரும் வீரர் என்ற நிலை பெறச் செய்தது.

விடுதலைப் போரில் ஈடுபட்டுள்ள நமக்கு, பல நாட்டு விடுதலைப் போர்க் காதைகள் — அவை வரலாற்று ஆதாரமுள்ளனவாயினும், அல்லது வளமான கற்பனையின் விளைவேயாயினும், நிரம்பத் தெரிந்திருக்கவேண்டும் என்பதற்கே சுவிட்சர்லந்துச் சுதந்திரப் போரின் வீரத் திலகம் என்று போற்றப்படும் வில்லியம் டெல் பற்றிய குறிப்புரையும், முகப்பில் ஓவியமும் தரப்பட்டிருக்கிறது.

★

**“தீச் சுடர்”**

**தீச்சுடர் 3—5—56 வியாழக்கிழமை** முதல் வெளியிடுவதற்கான ஏற்பாடு முடியும் நிலையிலிருக்கிறது; ஏஜண்டுகளுக்கு ஏப்ரல் 16-ந் தேதி நிபந்தனைப் பாரங்கள் அனுப்பி வைக்கப்படும். அதன்படி பாரத்தை பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

சி. பி. சிற்றரசு
ஆசிரியர் தீச்சுடர்
31, தையப்ப முதலி தெரு
சென்னை 1.

# குடும்ப பாசம்

**தம்பி!**

நான் பெருமூச்செறிந்தபடி, பக்கத்தில் அமர்ந்திருந்த சம்பத்திடம்—இப்போதாவது புரிகிறதா, நான் ஏன் சங்கடப்படுகிறேன்? என்ற காரணம், என்று கேட்டேன். நாங்கள் உட்கார்ந்திருந்த இடம், சினிமாக் கொட்டகை; படம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்; காட்சி என் கருத்திலே கிளர்ச்சியுண்டாக்கிவிட்டது; ஆங்கிலப் படம், டிஸ்ரேலி எனும் பிரிட்டிஷ் அரசியல் தலைவனைக் குறித்த வரலாற்றுப் பின்னணிகொண்டது.

டிஸ்ரேலி, ஆட்சிமுறையைக் கண்டித்துப் பேசுகிறான், அவன் கருத்துரைக்கு ஆதரவு பெருகுகிறது, ஆட்சிப் பொறுப்பே அவனிடம் தரப்படும் சூழ்நிலை உண்டாகிறது; அப்போது, அறிவாளி, ஆற்றல் மிக்கோன், எதிர்ப்புக்கு அஞ்சாதான், எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடக்கூடிய துணிவுகொண்டோன், பிரச்சினைகளைத் துருவித் துருவி ஆராயும் திறன்கொண்டோன் என்றெல்லாம் புகழப்பட்ட டிஸ்ரேலி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறான், தன்னால் இயலுமா என்று சிந்தித்து ஐயமடைகிறான், அச்சத்துடன் கேட்கிறான் நண்பர்களிடம், "இந்தப் பெரும்பாரத்தை நானெப்படித் தாங்க முடியும்? என்னால் முடியுமா இந்தச் சுமையைத் தூக்கிட............" என்று. நான் அந்தக் காட்சியைக் கண்டுதான், சம்பத்தைக் கேட்டேன், "இப்போதாவது புரிகிறதா? இதோ, டிஸ்ரேலி எப்படி அச்சமடைகிறான் பார், புதிய பொறுப்புகளை ஏற்க; காரியமாற்றவேண்டிய கட்டம் வருகிறபோது, கவலை எப்படிப் பிறக்கிறது பார்! இதே நிலைதானே இப்போது எனக்கு ஏற்படச் செய்கிறாய். என்னால் முடியுமா? ஏன் எனக்குத் தொல்லை!" என்று கேட்டேன்.

திராவிட மக்களுடைய வாழ்க்கைக்கே பெரியதோர் சிக்கல் ஏற்பட்டிருந்த நேரம். பெரியாரின் திருமணம் நம்மை எல்லாம் திகைக்க வைத்த சமயம்; திராவிடர் கழகத்தைத் துறந்து கண்ணீர் வடித்தபடி நாம் வெளியேறிய நேரம். தோழர் குருசாமி, சம்பத்துக்கு, காலத்தின் குறிகள், கடமையாற்றுவதிலே உள்ள கண்ணியம், இயக்கத்தை நடத்திச் செல்லவேண்டிய பெரும்பொறுப்பு இவைபற்றி எல்லாம் உணர்ச்சிகரமான குட்டிப் பிரசங்கங்கள் நடத்திவிட்டார்; இருவரும், 'விடுதலை'யில் கூடிப்பணியாற்றிய காலம் அது.

விடாதே அண்ணாத்துரையை!—என்று கூறிவிட்டார் — விட்டால் போதும் என்று காஞ்சீபுரம் ஓடிவந்துவிட்டேன் நான்—சம்பத்தும் நமது இன்றைய துணைப் பொதுச் செயலாளர் நடராசன் அவர்களுமாக வந்து, என்னைப் பிடித்துக்கொண்டனர்.

இப்போதுகூட, எப்போதாவது, அந்த அறையில், பிற்பகலில் சிறிது நேரம் படுத்துறங்கப்போவதுண்டு — போகும்போதெல்லாம், எனக்கு அந்தக் காட்சி அப்படியே தெரிவதுபோலிருக்கிறது. ஒரு நாள் பிற்பகல், நான் படுத்துக்கொண்டிருக்கிறேன் — சம்பத்தும் நடராசனும் வந்துவிட்டார்கள்.


**இது சரியில்லை அண்ணா! எப்போதும் இப்படித்தானா? பொறுப்பேற்கத் தயக்கமா?**

**இந்த நேரத்தில் நாம் கடமையைச் செய்யத் தவறினால், நாடு நம்மை நிந்திக்கும்.**

**குருசாமி, எப்படியும் தங்களைக் கையோடு பிடித்திழுத்துக்கொண்டு வரச் சொல்கிறார்.**

**விளையாட, இது சமயமல்ல; வேதனையை மறைக்க பொழுதுபோக்குகளில் மூழ்கிவிடக்கூடாது.**

இருவரும்—இரட்டைப் புலவர்கள்; கவிதைகளைக் கொட்டுவது போல — கருத்துகளைக் கொண்டு என்னைத் தாக்குகிறார்கள். என்ன செய்வேன்! சென்னை சென்றேன்—செயலாற்ற இணங்கினேன் — ஆனால் அதே போது, பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதிலே எனக்கோர் அச்சம் பிடித்தாட்டியபடி இருந்தது. இந்த என் எண்ணத்தை அப்



படியே சித்தரித்துக் காட்டு வதுபோலிருந்த, டிஸ்ரேலி படக் காட்சி என்னைத் தூக்கிவாரிப் போட்டது; அதனால்தான் பெரு மூச்செறிந்தபடி சம்பத்தை "இப் போது புரிகிறதா என் சஞ்சலத் துக்குக் காரணம் இருப்பது?" என்று கேட்டேன். அவன் தந்த பதிலோ, காட்சியைக் கண்டதால் ஏற்பட்டதைவிட அதிகமான அதிர்ச்சியைக் கொடுத்தது— உன்னிடம் சொல்வதிலே தவறு என்ன—சிறிதளவு வெட்கம்கூடத் தான் ஏற்பட்டது. சம்பத்து மட்டுமே என்னிடம் அவ்வளவு தாராளமாகவும், சரளமாகவும் பேச முடிகிறது. சம்பத்தை மட்டுமே, நான், எவ்வளவோ முயன்றாலும் கூட, அவர் இவர் என்று கூற முடிவதில்லை!

பொறுப்பேற்றுக் கொள்வதிலே உள்ள கலக்கத்தைக் காட்டும் காட்சியையும், அதன் மூலம் பெறப்படும் கருத்தையும் நான் என் நிலைக்குக் காரணமாகக் கொண்டு, இப்போது புரிகிறதா? என்று சம்பத்தைக் கேட்டே னல்லவா—பதில் என்ன கிடைத் தது தெரியுமா? இவ்வளவு பெரிய பாரத்தை, சுமையை எப்படி நான் தாங்க முடியும்? என்றல்லவா டிஸ்ரேலி கேட்ட முறைப்படியே நான் கேட்டேன்— பதில் என்ன என்று எண்ணுகிறாய்? "சுமையை —பாரத்தை—தாங்கப்போவது நாம் ஒருவன்தான் என்று ஏன் அண்ணா! நீங்கள் எண்ணிக்கொள் கிறீர்கள், சுமையைத் தாங்கப் போவது, நாம்—**நாம்** — உம்மீது மட்டுமல்ல பாரம்—" என்றானே அந்தப் போக்கிரி!! நான் உண்மை யில் வெட்கப்பட்டேன். இயக் கத்தை நடத்திச் செல்லவேண்டிய சுமை—பாரம்—பொறுப்பு — அவ் வளவும் என்மீது மட்டுமே ஏற்றப் படும் — என்று எண்ணினதால் தானே, இவ்வளவு சுமையைத் தாங்க என்னால் எப்படி முடியும் என்ற கலக்கம் எனக்கு ஏற்பட் டது. அந்த எண்ணம் தவறானது என்பதை எடுத்துச் சொல்வதாக இருந்தது சம்பத்து அளித்த பதில்—அந்தப் பதிலிலே பொதிந் துள்ள தத்துவம்தான், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே அச் சாணியாக அமைந்திருக்கிறது— 'நாம்' என்பது வலிவும் பொலிவும் கொண்டதோர் தத்துவம்—'நான்' என்பது வேதாந்தத்திலேயே அதை அகம்பாவம் அல்லது மனமயக்கம் என்கிறார்கள் என்றால், அரசியலில் அது அர்த்தமற்றது மட்டுமல்ல, அனுமதிக்கப் பட்டுவிட்டால் ஆபத்தை, அடுக்கடுக்காகக் கிளப்பிவிடக் கூடியதுமாகும்! காண்கிறோமே இப்போது கல் லறைகளை எல்லாங்கூட அல்லவா கல்வி எடுத்துக் காட்டுகிறார்கள்— நாம்—நான் இந்த இரு தத்துவங் களில் எது மேலானது என்பதை மேதினிக்கு விளக்கிக் காட்டுகிறார் கள்.

'நான்'—என்பது தவறு—'**நாம்**'— என்பதுதான் நிலைமை என்பதை அன்று படக்காட்சிக் கொட்டகை யில் கண்டதிலிருந்து, அந்தப் பொலிவும் வலிவும் பொருந்திய தத்துவம், கழகத்துக்கு எவ்வளவு மாண்பளித்திருக்கிறது என்பதை அறியவும் அகமகிழவும், வாய்ப்பு கள் பலப்பல வந்தவண்ணமுமுள் ளன!

'நாம்' என்ற கூட்டுச் சக்தியை —குடும்பச் சக்தியைக் காட்டிடும் அந்தச் சொல்லுக்கு எழிலோவிய மாக அமைந்துவிட்டது, தி. மு. க.

நானும் நீயும் — நம்மில் ஒவ் வொருவரும் — அந்த 'நாம்' என் பதிலே இருக்கிறோம் – அதிலே இருப்பதன் மூலம் ஏற்றம்பெறுகி றோம்—அந்த ஏற்றம் நாட்டுக்குப் பயன்படுகிறது.

'நாம்' என்ற அந்தக் கூட்டுச் சக்தியைக் காட்டிடும் சொல்லி னுள் பொதிந்துள்ள அரிய பாடம், ஜனநாயகப் பண்பாட்டுக்கே அடிப் படையாகிறது—அகில உலகிலும், எங்கு, எந்தச் சமயத்தில் எத்த கைய அரசியல் குழப்பமோ, அவல நிலையோ விளைகிறது என்றாலும், இந்த '**நாம்**' என்பதிலே உள்ள தூய்மையிலே ஏதோ ஓர்வித தூசு படிந்துவிட்டது என்று கூறலாம்— 'நான்' என்பது, '**நாம்**' என்பதை வலுச்சண்டைக்கு இழுக்கிறது என்று பொருள்கொள்ளலாம்.

தம்பி! 'நான்' — என்பதிலிருந்து '**நாம்**' என்ற கட்டம் பயணமாவ தற்கு, ஒவ்வோர் நாடுகளிலே, கொட்டப்பட்ட வியர்வையும் இரத்தமும், காணிக்கையும் கொஞ்சமல்ல!! இவ்வளவு 'பலி' வாங்கிய பிறகும் கூட, இன்றும் '**நாம்**' என்பதை 'நான், என்பது, சமயம் கிடைக்கும்போதெல்லாம் உலுக்கிப் பார்த்திடக் காண்கி றோம்; நாடுகளிலேயுஞ் சரி, கட்சி களுக்கு உள்ளேயுஞ் சரி, வீடுகளி லும் கூடத்தான்!!

திராவிட முன்னேற்றக் கழகம், இந்தத் துறையில், பிறர் பார்த்து, பாராட்டத்தக்க (பிறர் என்பது நம்மை மனிதர் என்று ஏற்றுக் கொண்டுள்ளவர்களை மட்டுமே குறிப்பிடுகிறது) அளவில், வெற்றிபெற்று, வீரர்கோட்டமாய், தோழர்களின் கூடமாய், குடும்ப மாய்த் திகழ்கிறது. அந்தக் குடும் பத்துக்குக் குதூகலத் திருவிழா மே 17, 18, 19, 20-ல், எப்படி வராம லிருக்கமுடியும், குடும்பத்தில் ஒரு வர் என்ற பாசம் உள்ளவர்களால்!

நூறு தோழர்கள், சைகிளில் புறப்பட்டு, வழிநெடுக இலட்சிய முழக்கம் எழுப்பிய வண்ணம், திருச்சி மாநாட்டுக்கு வருகி றோம்—என்று குளித்தலைத் தோழர் முத்து கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

பூ! இதென்ன பிரமாதம்! குளித் தலைக்கும் திருச்சிக்கும் இடையே நெடுந் தொலைவா? தூத்துக்குடியி லிருந்து கிளம்புகிறோம் அண்ணா! என்று 'சேதி' தருகிறார் மற்றோர் தோழர்.

பல்வேறு ஊர்களிலிருந்து 'சைகிள்' படைகள், திருச்சி வருவ தற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருவது, தெரிகிறது —தெம்பும் பிறக்கிறது. பல்வேறு ஊர்த் தோழர்களும், 'நாம்' என்ப தற்கு உயிரூட்டம் அளிக்கும் உயர் நோக்குடன், நான்—நான்—நான்— என்று கூறிக்கொண்டு, மாநாட் டுக்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள னர். டிஸ்ரேலிபோல, எப்படிச் சுமை யைத் தாங்குவது என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை, 'நாம்' பணியாற்றப்போகிறோம் என்று சம்பத்து கூறியது, வாதத்திறமை விளக்கமாகமட்டும் அமைந்துவிட வில்லை, கழக வரலாறே அதுபோல் அமைந்துவிட்டது. ஒரு அருமையான குடும்பம் இன்று திராவிடத்திலே பணி யாற்றிக்கொண்டிருக்கிறது. எனவே, மற்ற எங்கும் காணமுடியாத, பெற முடி யாத, ஓர் கனிவு இங்கு சுவையளிக்கிறது.

என்னையே நம்பி! என்ற சொற் றொடருக்கு, தி. மு. க. இடமளிப்ப தில்லை; என்மூலம் இது; என்னைக் கொண்டு இது; என்று குடும்பத் துப் பொதுச் சொத்துக்கும் சுகத் துக்கும், அதிலுள்ள ஒவ்வொரு வரும் காணிக்கை செலுத்திடக் காண்கிறோம்.

கலையைக் காணிக்கையாக்கு வோர், கருத்துக் கருவூலத்தைக் காணிக்கையாக்குவோர், கஷ்டநஷ்

டம் ஏற்கும் துணிவினைப் பெற்றளிப்போர், கள்ளி காளானைக் களைந்தெறிந்து பாதையினைச் செப்பனிட்டுத் தருவோர், படைவரிசையில் பரணி பாடுவோர், எழுத்தாளர் பேச்சாளர், இன்சொலால் எவரையும் வசீகரிக்கும் இயல்பாளர், நாவலர், பாவலர், நடிகர், இசைவாணர், எனும் இன்னபிற வகையால், கழகத்தின் பொது வலிவையும் பொலிவையும் வளர்த்திடும், வன்மைமிக்கோரின் குடும்பமாக, தி. மு. க. இன்று விளங்கிடக் காண்கிறோம்.

இதைத் தாக்குகிறார்கள், அதைத் தாக்குகிறார்கள்!

இங்கு கிளை!

அங்கு கிளை!

எங்கும் தழைக்கிறது கிளைகள்!

இடைவிடாத பிரச்சாரம்!

இணையில்லா ஊக்கம்!

மதத்துறை ஊழல்களைத் தாக்குகிறார்கள்.

ஆளவந்தாரின் போக்கை அம்பலப்படுத்துகிறார்கள்.

இழந்த இன்பத்தை மீட்போம் என்று முழக்கமிடுகிறார்கள்; சுகபோகிகளையும் சுரண்டிப் பிழைப்போரையும் சாடுகின்றனர்.

புதிய அரசு கேட்கின்றனர்,

**பெரும் பத்திரிகைகளின் இருட்டடிப்பு.**

**பணம் படைத்தோரின் பரிகாசம்.**

**மதப் புரட்டர்களின் சாபம்.**

**மாற்றுக் கட்சியினரின் தூற்றல்.**

**ஆளவந்தாரின் அடக்குமுறை.**

இவ்வளவும் கிளம்பிக் கொக்கரிக்கின்றன—எனினும் வளருகிறார்கள்—வளர்ந்தவண்ணமிருக்கிறார்கள்.

### ஏன்? எப்படி? எதற்காக?

நாடு கேட்கிறது இவ்வண்ணம். நமது வளர்ச்சி நாட்டிலே புதிய பிரச்சினையாகிவிட்டது. கழகம் ஒரு கேள்விக்குறியாகிவிட்டது—அபாயக்குறி என்று அலறுபவர்களும் உளர். எனவே, நமது முழு உருவமும் விளங்கும்வண்ணம் மாநில மாநாடு அமைதல் வேண்டும்.

குடும்பத்திலோர் குதூகல விழா—மாநில மாநாடு—தடையும் பணமுடையும் குறுக்கிட்டாலும் யாரும் திருச்சிக்கு வருகிற கடமையிலிருந்து மட்டும் தவற முடியாது—குடும்ப பாசம் அனைவரையும், மே 17, 18, 19, 20 நாட்களில் திருச்சிக்குக் கொண்டுவந்தே சேர்க்கும்.

நாலு நாட்கள்! நாடாண்ட ஓர் இனம ஓடேந்திகளிடம் சிக்கிச் சீரழிந்த சோகக்காதை, நாவாய் செலுத்தி வாணிபம் நடாத்தி நவநிதியைக் குவித்த ஓர் இனம், பாபத்துக்குக் கழுவாய் தேடுகிறேன் என்று கூறிக்கொண்டு புல்லேந்தியின் பாதம் கழுவிய பரிதாபக் காதை, கோட்டை கட்டிக் கொற்றம் நடாத்திய ஓர் இனம், வேட்டையாடி வீரத்தைக் காட்டிய ஓர் இனம், சேட்டைகளைச் சடங்குகளாகக் கொண்டு, 'கேட்டை மூட்டை'களுக்கெல்லாம் பொன்னையும் பொருளையும் கொட்டிக் கொடுத்து ஏமாளிகளாகிவிட்ட இதயம் நோகச் செய்யும் காதை—இவைகளை உணராமலேயே, நாடு, இனம், மொழி, வாழ்க்கை முறை அனைத்தையும் மறந்துபோய், மாற்றானை மகேசனின் தூதுவன் எனக்கொண்டு, மதி இழந்து மதிப்பிழந்துபோன, மனதை வேகவைக்கும் காதை; கப்பிக்கொண்டிருந்த மன இருள் விடிவெள்ளியால் மெள்ள மெள்ள விலகிய வரலாறு, ஒளி கிடைத்ததும் உள்ளத்துக்கு ஏற்பட்ட உத்வேகம், அதன் பயனாக ஏற்பட்ட இயக்கம், அதன் வளர்ச்சி ஆகிய இன்றைய வரலாறு, இதன் மூலம் நாம் அடைய இருக்கும் இலட்சியம், அது அளித்திடப் போகும் இன்பம், அதன் பயனாக நாடு பெறப்போகும் ஏற்றம், அதன் விளைவாக ஏற்பட இருக்கும் பெருமிதமிக்க எதிர்காலம் பற்றிய கணக்கெடுப்பு, ஆகிய இவைபற்றி எலாம், நாம் பேசவும், பேசுவதைக் கேட்கவும், உரையாடவும் உணர்ச்சியைப் பரிமாறிக் கொள்ளவும், வழிவகைபற்றி ஆய்வுரை வழங்கிடவும், திட்டம் தீட்டிடவும், செயல்படு முறைபற்றித் தீர்மானித்திடவும், நாலு நாட்கள் போதா! **நாலே நாலு நாட்கள் தான்!!** அந்த நாலு நாட்களுக்குள், நாம் நமது உள்ளத்திலே ஊற்றெடுக்கும் ஓராயிரம் எண்ணங்களையும், வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி, செயல்படத்தக்க செம்மையினைத் தேடிப் பெற்றிடவும் வேண்டும். தலைமுறை தலைமுறையாக—பன்னெடுங் காலமாகப் பாழ்பட்டுப் போயுள்ள நிலையினை மாற்றிடத்தக்க மகத்தானதோர் பணியில் ஈடுபட்டுள்ள நாம், மாநில மாநாடு நடாத்துவது, கூடிக் கலைந்திட அல்ல—குடும்ப பாசத்துடன் கூடி, நாட்டு விடுதலைக்கான நல்லார்வத்தை எந்த அளவிலும் வகையிலும் மற்றையோருக்கு ஊட்டினோம் என்பதுபற்றி ஆய்ந்தறிந்து, நமது முறைகளிலே குற்றம் குறை உளவா என்று பேசிக் கண்டறிந்து, திருத்தப்பட வேண்டியவை, நிறுத்தப்பட வேண்டியவை, புகுத்தப்படத்தக்கவை, களையப்பட வேண்டியன யாவை என்பதுபற்றி எண்ணிப் பார்த்து, நாம் ஏற்றுக்கொண்டுள்ள மகத்தான பணியினை வெற்றிகரமாக்கிட எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் வீறுகொண்டெழுந்துள்ள இந்தக் காலகட்டத்துக்கு ஏற்ற வழிவகை கண்டறிந்தாக வேண்டும். நாலே நாட்கள் மட்டுமே உள்ளன! எனவே ஒவ்வோர் நாளும், ஒவ்வோர் மணியும் மிகமிக அக்கறையுடன் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

பொதுச் செயலாளர் நான் இந்தக் கட்டுரை தீட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை என்னால் யூகித்துக்கொள்ளவும் முடிகிறது—பரிதாபப்படவும்தான் செய்கிறேன். இளமை எழிலளிக்கிறது, இன்பபுரிக்கு அழைக்கிறது, இயக்கமோ அவரை, திருச்சிக்குத் தூக்கு


## தொழில் கல்வி வகுப்புகள்

1956 மே மாதம் 1-ம் தேதி முதல் ஜுன் மாதம் 9-ம் தேதி வரை ஆடோமொபைல் ஸர்விஸ் என்ஜினீயரிங், ரேடியோ ஸர்விஸ் என்ஜினீயரிங், பெரிய கடியாரம் செய்தல் ஆகிய, ஆறு வார வகுப்புகள் நடத்தப்படும். ஒரு சில மாணவிகளுக்கு சில சலுகைகள் கொடுக்கப்படும். பிராஸ்பக்டஸுக்கு I. L. W. A. Ltd., கோபால் பாக், கோயமுத்தூர் என்று எழுதவும்.

போன் 40
தந்தி "ILWA"

G. D. NAIDU,
பிரஸிடெண்ட்.

கிறது! தாமரை பூத்த தடாகத்தருகே சென்று முகத் தாமரையாளிடம் அகத்துறை இலக்கணம் கற்றிடவேண்டிய காளையர்தான்—பருவத்தை எண்ணிடின் — எனினும் களம் சென்று தமிழரின் தன்மானத்தைக்காத்திடவேண்டியகட்டம் வருகிறபோது, வல்லூறு வட்டமிடும் களத்தில், மலர்த் தோட்டத்தில் காணும் இன்பத்தைவிட அதிகமன்றோ காண்பராம், வீரத் தமிழர்கள்—வீழ்ச்சியுறாத நாட்களில். நமது பொதுச் செயலாளர், அகமும் புறமும் நன்கு பயின்றவர்—எனவே, புறநானூறுக் காட்சிகளைத் துணைக்கழைத்துக்கொண்டு, திருச்சிக்குச் சென்றுள்ளார்.

பந்தல் வேலை எந்த அளவில் உள்ளது?

பாய்களை வாங்கிவிட்டீரோ?

பணிமனையில் இன்று என்ன நிலைமை?

கொடி மரம் உயரம் எவ்வளவு?

இப்படி எல்லாம், கேட்டுக்கொண்டும், ஒவ்வோர் வேலையையும் கவனித்துக்கொண்டும் இருக்கிறார், அவர் உடனிருப்பதால் ஏற்படும் உற்சாகம், ஏற்கனவே 'சிட்டு' போல் பறந்து பணியாற்றிக் கொண்டுவரும் திருச்சித் தோழர்களுக்கு, மேலும் உரமும் திறமும், தரமும், தருகிறது—வேலை மும்முரமாக நடைபெற்ற வண்ணமிருக்கிறது. வேலையோ, தம்பி, ஏராளம், ஏராளம்!! தடைபல கடந்திட வேண்டி இருக்கிறது—ஒவ்வோர் கட்டமும் புதுப்புதுப் பிரச்னையைக் கிளப்புவதாக அமைந்துவிடுகிறது ஒரு பிரச்சினை தீர்க்கப்பட்டானதும், வெற்றி இன்பத்தைக் கூடச் சுவைக்க முடிவதில்லை, வேறோர் பிரச்சினை கிளம்பிவிடுகிறது. நாலே நாலு நாட்கள்—அப்பப்பா! கடந்த நாற்பது நாட்களாக நமது தோழர்கள், எடுத்துக் கொண்டுள்ள முயற்சி சாதாரணமானதல்ல. கடினமான வேலை; ஐயமில்லை ஆனால் திருச்சி தாங்கிக் கொள்ளும்.

நினைவிருக்கிறதா, தம்பி, எனக்குச் செந்தேனாக இனிக்கிறது நினைவு — திருச்சிதான், திராவிட முன்னேற்றக் கழகமாக நாம் பணியாற்றத் தொடங்கியதும், நாம் நடாத்திய முதல் மாநாடு — மாவட்ட மாநாடு!!

திருச்சியில் அந்த மாநாடு நடத்த நாம் திட்டமிட்ட உடனே, உனக்குத் தெரியுமோ என்னமோ, திகிலூட்டினார்கள்—நம்மை நிந்திப்பதிலே நித்யானந்தம் காண்பவர்கள்.

திருச்சியிலா?

மாநாடா?

மக்கள் வருவார்களா?

எங்கே இருந்து கொண்டுவரப்போகிறார்கள்?

இடம் கொடுப்பவர் யார்?

இரண்டு நாள் தங்கிட வசதிஉண்டா?

ஒருவேளைச் சோற்றுக்கு வழியுண்டா?

திருச்சியிலா, மாநாடு!! பேஷ்! பேஷ்! இங்கு தோல்வி தாக்கும்—மூலைக்கு ஒருவராக முக்காடிட்டுக்கொண்டு ஓடிவிடப்போகிறார்கள்!!—என்றெல்லாம், திகிலூட்டினர், எரிச்சலை மூட்டினர்.

என்னைத்தான் தம்பி, உனக்கு நன்றாகத் தெரியுமே!! சிறு சங்கடமென்றாலும் பெருத்த குழப்பம் புகுந்துவிடுமே உள்ளத்தில். அதனால் நான் பயந்துபோனேன். மாவட்ட மாநாட்டுக்கான கொட்டகை அமைக்கப்பட்டுவிட்டது—மறுநாள் மாநாடு—முன்னாள் மாலை சென்று பார்க்கிறேன்—பசியுடன் உள்ள பெரும் புலி தன் அகன்ற வாயைத் திறந்துகொண்டிருப்பது போல, கொட்டகை காட்சியளிக்கிறது. இதோ என் மனக்கண்ணால் காணமுடிகிறதே, அந்தக் கொட்டகையை.

"சாம்பு...!"

"என்னண்ணா!..."

"பந்தல்...கொட்டகை...?"

அவசரத்திலே போட்டது, இவ்வளவு தான் முடிந்தது..."




"இவ்வளவுதான் முடிந்ததா...என்ன சாம்பு, விளையாடுகிறாய்? இவ்வளவு பெரிய கொட்டகையை ஏன் போட்டாய்? யார் போடச் சொன்னது? இவ்வளவு பெரிய கொட்டகைக்கு, ஆட்களை எங்கேஇருந்து கொண்டு வந்து குவிப்பது, நாளைக்கு இதிலே கால் பகுதிக்குக்கூட தோழர்கள் வருவார்களோ இல்லையோ! இவ்வளவும் நாளைக்குக் 'காலி'யாக இருக்குமே! எப்படி அந்த அவமானத்தைத் தாங்குவது? என்ன வம்பு செய்துவிட்டாய், சாம்பு!"

"அண்ணா! கொட்டகை பெரிது என்கிறாயா?"

"இதிலே சந்தேகம் வேறா உனக்கு. போ, சாம்பு. போய், பந்தல்காரர்களை அழைத்து வா. பந்தலில் பாதி அளவுக்குமேல், தனித்தனி விடுதிகளாக மாற்றி அமைத்தாகவேண்டும். காலி இடமாகக் கொட்டகை தெரியக்கூடாது. இதிலேயே ஒரு இடத்திலே தொண்டர்கள் முகாம், மற்றோர்பக்கம் பிரதிநிதிகள், ஜாகை இன்னோர் பக்கம் ஏதாவது ஒரு விடுதி, எதையாவது செய்து கொட்டகையின் அளவைக் குறைத்திட வேண்டும்"

"வேண்டாம், அண்ணா!"

"சாம்பு! என்னிடம் விளையாடாதே! இதுதான் முதல் மாநாடு. நாம் கழகம் துவக்கி காலை ஊன்றிவைக்க ஆரம்பித்திருக்கிறோம். இந்த நேரத்திலே, மாகாண மாநாட்டுப் பந்தல் போலக் கொட்டகை போட்டுவிட்டு ஆள் கிடைக்காமல், நாளைக்கு அசிங்கப்படுவதா? வீண் விஷப் பரிட்சை வேண்டாம். காலையில் நான் பார்க்கவருவேன்—அதற்குள் கொட்டகையின் அளவு சிறிதாக்கப் படவேண்டும்..."

"சரி, அண்ணா......"

"தர்மு! இந்த வேலையை உடனே கவனி, பராங்குசம், என்னமோ ஏதோ என்று இருந்துவிடாதே! மணி, கவனமிருக்கட்டும்! சாம்பு! உடனே வேலை நடந்தாகவேண்டும்"

கொட்டகை பெரிது, கூட்ட ஆட்கள் வரமாட்டார்கள் என்ற சந்தேகம் குடைந்தது — சாம்புவிடம் சண்டைக்கு நின்றேன்.

அதே திருச்சியில், அதே சாம்புவே, இரண்டாயிரத்துக்கு ஆயிரம் என்ற அளவிலே கொட்டகை அமைத்துக் கொண்டிருக்கிறார்!! தம்பி! இந்த இன்பம் எத்தகையது என்பதை எண்ணும் போது, ஆஹா! எப்படி இருக்கிறது என்கிறாய்!!

சாம்பு! சாம்பு!!என்று அழைத்துக் கொண்டு, அன்புக் கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருந்த சங்கரன் இல்லை, இந்த இன்பத்தை உட

னிருந்து சுவைக்க — இயற்கை யெய்திவிட்டார்—ஓடி ஆடி வேலை செய்து, சிறப்பினைக் கூட்டித் தந்திட நண்பர் இருதயராஜ் இல்லை, அணைந்துவிட்டது அந்தத் திருவிளக்கு—இந்த வாட்டம் என்னை வதைக்கத்தான் செய்கிறது. தயக்கத்துடன் நாம் திருச்சியில் முதல் மாவட்ட மாநாடு துவக்கினோம்—தூய உள்ளத்துடன் பணியாற்றி வந்த வண்ணமிருக்கிறோம்—கொள்கையிலிருந்து வழுவினோமில்லை, கொடுமைகள் கண்டு கலங்கினோமில்லை, பாதை வகுத்துக்கொள்வதிலே பொறுப்பு காட்டினோம், வகுத்துக்கொண்ட பாதையிலே நடந்து செல்லும்போது குறுக்கிட்ட இடையூறு கண்டு அஞ்சி அயர்ந்தோமில்லை—பயணம் துவக்குமுன்பு பல்வேறு மனக்குழப்பமிருந்தது – எண்ணித் துணிந்தோம்—இதோ இன்று இரண்டாவது மாநில மாநாடு, திருச்சியில் நடைபெறுகிறது—நகருக்குள் கிடைக்கும் திடல்கள் போதுமானவை அல்ல என்று, ஊர்ப்புறம் தேடி, விரிந்து பரந்து கிடக்கும் திடலை நாடினோம்—அந்த அளவுக்கு வளர்ச்சி கண்டோம். காரணம், தம்பி, **நாம்—நாம்—** அதனால்!!

நாத்திகர்கள்!

துவேஷிகள்.

குழப்பக்காரர்கள்.

கூவித்திரிவோர்

வகுப்புவாதிகள்

என்னென்னமோ ஏசுகிறார்கள்—கேட்கும் மக்களின் தொகை குறையக் குறைய, வகை மட்டமாக மட்டமாக, தூற்றலின் வேகம் அதிகமாகக்கூடத் தெரிகிறது.

கட்டைவிரலை வெட்டிவிடுவேன்.

கையில் கிடைப்பது கொண்டு அடிப்பேன்.

ஈ, எறும்புபோல நசுக்கிவிடுவேன்.

இருக்குமிடம் தெரியாமல் அழித்துவிடுவேன்.

**கணக்கைத் தீர்த்துக் கட்டிவிடுவேன்!!**

காமராஜரும் சரி, ஆச்சாரியாரும் சரி, இதுபோல, உருட்டி மிரட்டிப் பேசத் தவறியதில்லை.

உருட்டல் மிரட்டலோடு நின்றுவிடவில்லை—'தேனீ' நடத்திக் காட்டிடவும் அவர்களுக்கு வசதி இருந்தது. நாவலர்மீது பெரும் பாறையைப் போட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படுத்த, உத்தமர் காந்தியாரின் பெயர்கூறி அரசியலில் உயர் இடம் பெற்றவர்கள் தியாகராசர்கள் முனைந்தனர்!

144ம், தடியடியும் சிறையும் சித்திரவதையும், துப்பாக்கியும், நம்மைத் தாக்கின—தாக்குதலின் வேகமான கட்டத்துக்குத் துரைத்தனம் தன்னைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்! கழகத்தின் முன்னணியில் நின்று பணியாற்றுவோர் அனைவருமே சிறை அனுபவம் பெற்றுவிட்டார்கள்!

சாமான்யர்களாகிய நாம், ஒரு விடுதலை இயக்கத்தை நடத்திச் செல்லும்போது, அலட்சியப் பார்வையால், ஏளனப் புன்னகையால், இரண்டோர் இழிமொழியால் நம்மை இருக்குமிடம் தெரியாமல் செய்திட முடியும் என்றுதான், கோட்டையில் கொடி நாட்டியவர்கள் எண்ணிக்கொள்வார்கள்.

நாம் வளர்கிறோம் என்பதை ஒப்புக்கொள்வதே தங்கள் பெருமைக்குக் களங்கம் என்ற அளவுக்கு ஆணவம் பிடித்தவர்கள், நமது மாற்றார்கள்—இதனையும் அறிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் முடிகிறது.

நாம், வளர்ந்துவிட்டோம், இனி மறைத்துப் பயனில்லை என்ற கட்டம் பிறந்ததும், முழு மூச்சுடன் நம்மை எதிர்ப்பர் — கடுமையாக எதிர்ப்பர்—என்பதும் எதிர்பார்த்ததுதான். இவைகட்கெல்லாம், நான் அஞ்சியதில்லை, **'நாம்'** ஓர் இலட்சியத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆதலால்.

எனக்குமட்டும் ஒரு அச்சம் இருந்தது—அது திராவிட கழகத்தைப்பற்றி.

ஆயிரம் கருத்து வேற்றுமைகள் இருப்பினும், பகைத்துக்கொள்வதற்கான காரணம் பல கிளம்பிவிடினும், திராவிடர் கழகம் என்பது, நமது 'பாசத்தைப்' பெற்ற இடமல்லவா!! சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சியே இனி திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றப்பட வேண்டியதுதான் என்று 'அண்ணாத்துரை தீர்மானம்' என்ற பெயரிட்டு பெரியார் திட்டம் தந்தாரல்லவா, அதற்கும் முன்பே, காஞ்சிபுரத்தில் திராவிடர் கழகம் என்பதாக அமைப்பு அரும்பிற்று. சேலத்துக்குப் பிறகு, சீமான்களின் சீற்றத்தைத் தாங்கிக்கொள்ளவும், பதவிப் பிரியர்களின் பகையை எதிர்த்து நிற்கவும், எவ்வளவு கஷ்டப்படவேண்டி இருந்தது. சேலத்தில் சிந்தை குழம்பிப்போன சீமான்கள், சென்னையில் முகாமடித்துக்கொண்டு, எவ்வளவு 'சிண்டு, முடிந்து பார்த்தார்கள். தம்பி! அந்தக் காதை மிக மிகப் பெரியது. அப்போதெல்லாம், அன்புப் பாலூட்டி வளர்த்தோமே, அதற்கான அமைப்புமுறைபற்றி ஆயிரம் கனவு கண்டிருப்போம், அதற்கென ஓர் கொடி தேடப் பல முயற்சி—இவ்வளவு தொடர்பு பாசத்தை மூட்டாமலிருக்க முடியுமா! ஆகையினால், நாம் பெரியாரின் திருமணத்தால் திடுக்கிட்டுப் போன நிலையில், வெளியேறி, முன்னேற்றக் கழகமாகப் பணியாற்றத் தொடங்கியபோது, எனக்குப் பயமாகத்தான் இருந்தது — என்ன பயம் தெரியுமா தம்பி, எதிர்ப்பார்கள் என்ற பயமல்ல — பிரிந்துபோனார்கள் பைத்யக்காரர்கள், நல்ல பிள்ளைகள்தான், ஆனால் என்னமோ ஒரு தவறான காரணத்துக்காகக் கோபித்துக்கொண்டார்கள், அவர்களிடம் எனக்குக் கோபம் கிடையாது, சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பதுதானே கடன், அதுபோல, சிந்திக்கத் தெரியாத இந்தச் சிறுபிள்ளைகள் என்னமோ தனிக்குடித்தனம் வைத்துக்கொண்டார்கள், போகட்டும் பாபம், எங்கே இருந்தாலும் புத்தியோடு பிழைத்தால் போதும், எங்கே இருந்தாலும் என் சீடப் பிள்ளைகள்தானே, அவர்களுக்கு என்ன பெருமை வந்தாலும் அது அவ்வளவும் எனக்குத்தானே பெருமை, நன்றாகப் பேசுவார்கள், என்னிடமல்லவா பயிற்சி பெற்றார்கள், நன்றாக எழுதுவார்கள், ஈரோட்டுப் பள்ளியிலல்லவா படித்தார்கள், கொள்கையில் பற்று இருக்கும் என்னிடம் பெற்ற பாடம் வீண் போகுமா, நல்ல பிள்ளைகள் நமது சீடப் பிள்ளைகள் — என்று பெரியார் அன்புடன் பேசினால்—பிரிந்து வந்துவிட்ட பிறகும் நம்மீது பிரியம் காட்டினால், இன்மொழி பேசினால், என்ன செய்வது!! பெரியார் அந்தப் போக்கிலே நடந்துகொண்டால், நாம் யார்தான் அப்போது என்ன செய்திருக்கமுடியும்.

என்ன இருந்தாலும் அவருக்கு நம்மிடம் அன்பு குறையவில்லை.

என்ன காரணத்தாலோ ஒரு திருமணம் செய்துகொண்டாரே தவிர நம்மை இன்னமும் பிள்ளைகளாகவே பாவிக்கிறார்.

நாம் பிரிந்து வந்துவிட்டோம் என்றபோதிலும் நாம் நன்றாக இருக்க வேண்டும் என்பதிலே அவருக்கு எவ்வளவு அக்கரை பார்த்தீர்களா! பெரியார் பெரியார்தான்!!

என்னமோ 'விஷக்கடி வேளை' என்பார்களே அதுபோல, திருமண மூலம் ஒரு பேதம்—பிளவு ஏற்பட்டது—அவரோ நம்மைப் பகைவர் என்று கொள்ளவில்லை — பரிவு காட்டுகிறார் — பாசம் வைத்திருக்கிறார்.

பிரிந்து, தனியாகிவிட்டபோதிலும், எதிரிக்கு நம்மைக்காட்டிக்கொடுக்கவில்லை—கொள்கையை நாம், நமது முகாமிலிருந்து பரப்புகிறோம் என்ற வகையில் மகிழ்கிறார்—ஆதரிக்கிறார், கோபம் கொண்டு நாம் தான் அவரைவிட்டுப் பிரிந்துவந்துவிட்டோமே தவிர, அவருடைய பொன்னான குணத்தைப் பார், துளியாவது நம்மிடம் துவேஷம், பகை, இருக்கிறதா? இப்போதும், நல்ல பிள்ளைகள், நம்ம பிள்ளைகள் என்று பாசத்தோடு பேசுகிறார். இப்படிப்பட்ட பெரியாரிடமிருந்து நாம் பிரிந்துவிட்டோமே என்ன பேதைமை! என்ன பேதைமை!!

*தம்பி! இவ்விதமெல்லாம்தானே நாம் எண்ணி இருந்திருப்போம்—கோபம் தணிந்துவிட்டிருக்கும் — வெட்கம்கூட நம்மில் சிலருக்கு ஏற்பட்டிருக்கக்கூடும்—மெள்ள மெள்ள, நம்மிலே சிலரே, போகட்டும், நண்பரே! ஏதோ நடந்தது நடந்துவிட்டது — இனியும் நாம் பிரிந்திருக்க வேண்டாம். அவர் இவ்வளவு அன்பும் பாசமும் காட்டும்போது, நாம் பேதமும் விரோதமும் காட்டுவது சரியல்ல. திருமணம் பற்றி திடுக்கிட்டுப் போனோம்—கோபத்தால் வெளியே வந்தோம்—வெளியே வந்ததால், வேறு கட்சியாகப் பணியாற்றினோம், அவர் இவ்வளவுக்குப் பிறகும் நம்மிடம் பரிவு காட்டும்போது, நாம் பழையபடி ஒன்றாகிவிட வேண்டியதுதான்.—என்று கூறிடத்தானே செய்திருப்போம்—பிறகு முன்னேற்றக் கழகம் ஏது! ஒன்றாகிவிட்டிருக்க வேண்டியதுதான்! இடையிலே, ஓடியதும் ஆடியதும், பரணி பாடியதும் படை கூடியதும், வீண்! வீண்!*

*இவ்விதமான ஓர் நிலைமை ஏற்பட்டுவிடுமோ, என்ற அச்சம் மட்டும், எனக்குத் துவக்கத்தில் இருந்தது.*

*எதையும் தாங்கிக்கொள்ள முடியும், ஆண்டு பலவாக நம்மை நடத்திச் சென்றவர், நாம் அறிந்த ஒரே தலைவர், யாருடைய வாயிலிருந்து உதிரும் வார்த்தைகளை எல்லாம் தத்துவம் என்று கொண்டாடும் அளவுக்கு நாம் 'பக்தி' செலுத்தி வந்தோமோ, அப்படிப்பட்ட பெரியார், அன்புக் கணைகளை ஏவியிருந்தால், அதனை மட்டும் நம்மால் எதிர்த்திருக்கவே முடியாது.*

*பாசத்துடன் கலந்த ஒரு பார்வை, பரிவான பேச்சு, பழைய நேசம் பாழ்படாது என்பதைக் காட்டும் சிறு நடவடிக்கை எழும்பியிருந்தால் போதும், முன்னேற்றக் கழகம் இல்லை!*

*பெரியாரின் போர்முறை இவ்விதம் அமைந்துவிடுமானால் தனிக் கழகம் தானாக வீழ்ந்துபடும்—இதற்கு, ஆயிரம் பாடுகள் படுவானேன்—என்று நான் எண்ணினதுண்டு.*

*ஆனால், அந்த என் அச்சம், பொருளற்றதாக்கப்பட்டுவிட்டது.*

*அன்பினால் நம்மை வீழ்த்தியிருக்கமுடியும்—ஆரம்பக் கட்டத்தில்—பாசத்தால் நம்மை இழுத்துக்கொண்டிருக்க முடியும்—நேசம் காட்டி இருந்தால், நம்மில் பலருக்கு நெறித்த புருவம் இருந்திராது, ஆனால், அந்த முறைக்கு இடமில்லாதபடி 'சர்வ ஜாக்ரதை' யுடன், மிகத் திறமையாகக் கவனித்துக்கொண்டார், தூண்டிவிட்டு, துண்டு தேடிக்கொண்டு ஓடிவிட்ட உத்தமர்.*

*என்றென்றும் ஒன்று கூடவே முடியாத நிலையில் 'இரு பிரிவுகளையும்' வைத்துவிட்டார், இடம்தேடி ஏங்கிக் கிடந்தவர். அன்பு எங்கே சுரந்துவிடுகிறதோ — என்று பயந்து, நரகல் நடையை அள்ளி அள்ளி வீசியும், அபாண்டம் சுமத்தியும், பழிபாவத்துக்கு அஞ்சாத புகார்களை அவிழ்த்துவிட்டும் பெரியாரின் பெருந்தொண்டுக்குரிய பலனை, 'குத்தகை'க்கு எடுத்துக்கொண்டார் அந்தக் குள்ளர்.*

துரோகிகள்

காலிகள்

கூலிகள்

போக்கிடமற்றவர்கள்

வயிற்றுச் சோற்றுக்கு வக்கற்வர்கள்

அப்பாவிகள்

சூதர்கள்

கொலைபாதகர்கள்

பொறுக்கிகள்

*தம்பி! எழுதக்கூடக் கூச்சமாக இருக்கிறது, அப்படியெல்லாமல்லவா, ஏசத் தலைப்பட்டார்கள்!*

*ஒவ்வொரு தூற்றலும்; பிரிந்தோர் பிரிந்தோரே என்பதை உறு*


சிலம்பு நாடக மன்றம் அளிக்கும் சிந்தனை நாடகம்

அண்ணா தலைமையில்

பன்மொழிப் புலவர் அறிஞர் கா. அப்பாதுரையின் அழகோவியம்

"காற்றும் மழையும்"

மேடைக் கதை, உரையாடல்; இரா. மணிவேந்தன்

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

22—4—56 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

ஒற்றைவாடை தியேட்டரில்

நாடகம் நடைபெறும். காண வாரீர்! வாரீர்!!

நடிகர்கள்:-கவிஞர் கண்ணதாசன், வளையாபதி முத்துகிருஷ்ணன், என். கிருட்டினன், இரா. மணிவேந்தன், எஸ். எஸ். பி. லிங்கம், எஸ். பாலகிருஷ்ணன், நெல்லை வேணுகோபால், இராசமாணிக்கம், பாண்டியன், சிலம்பு, ஏ. என். சி. பாபு, ரங்கநாதன், முகிலன், மோகன், கணபதி, கருமுகில், பா. கலைஞன். நடிகைகள்:-வனிதா, காந்தா, மல்லிகா.

கட்டணம்:— ரூ. 3, 2, 1, அணா 8

டிக்கட் கிடைக்குமிடம்:— 13, அருணாசல ஆச்சாரிதெரு, சேப்பாக்கம்.

திப்படுத்தத்தான் உதவிற்று!! பிரிவினால் இலாபம் தேடியவருக்கு மகிழ்ச்சி பிடரியைப் பிடித்தாட்டிற்று!

அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ் என்றார் வள்ளுவர். அந்த அன்புக்கு ஒரு துளியும் வேலையில்லாதபடி செய்துவிட்டார், நீண்டநாள் பசியால் வாடிக் கிடந்தவர்.

அந்த 'இராஜதந்திரம்' அவருக்குப் பெருத்த இலாபம் என்று எண்ணி மகிழ்கிறார் என்கிறார்கள். மகிழட்டும்.

ஆனால், அந்தப் போக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை நிலைநிறுத்திவிட்டதுடன், அதன் மூலம், நாட்டிலே புதியதோர் 'சக்தி' வளர வழி செய்துவிட்டது; திராவிட முன்னேற்றக் கழகம் என்பது கோபத்தினின்றும் முளைத்தது என்ற நிலை மாறி, கொள்கையைப் பண்புடன் பரப்பிடவும், ஆற்றலுடன் செயல்படுத்தவும், அஞ்சா நெஞ்சுடன் அறப்போர் நடாத்தவும், இறுதி இலட்சியம் ஈடேறும் வரையில், இனபத் திராவிடம் காணும் வரையில், இடையறாது பாடுபடவும், இடையில் எவர் புகுந்து இளித்தாலும் கண் சிமிட்டினாலும், இது, அது என்று ஆசை மூட்டினாலும், எமது இலட்சியம் இன்பத் திராவிடம், அதைப் பெறவே எமது கழகம் என்று கூறி, ஏறு நடையுடன் இலட்சியப் பாதையில் நடந்திட ஓர் நேர்மையாளர் படை, நேர்த்தியான குடும்பம் நிலைத்துவிட்டது.

நிந்தனை நமது கழகக் கழனிக்கு உரமாயிற்று.

தூற்றல், நமது குடும்பத்துக்குள் தோழமை மலர்ந்திடச் செய்தது.

இழிமொழியும் பழிச்சொல்லும் வீசினர், நமது இதயத்தில் ஈட்டி கொண்டு தாக்கினர். மனப்புண் போக்கிட மாமருந்து தேடினோம், குடும்ப பாசம், அந்த மருந்தாக அமைந்தது.

அத்தகைய குடும்பம் நடாத்தும் குதூகல விழாவல்லவா தம்பி, 17, 18, 19, 20!! கண்கொள்ளாக் காட்சியாகத்தானே இருக்கும். வரலாறு, இத்தகைய சம்பவங்களைப் பொன்னெனப் போற்றுகிறது. வா, தம்பி, வா!! நண்பர் குழாத்துடன் வா!! அன்பன்

அண்ணாத்துரை.

6-ம் பக்கத் தொடர்ச்சி

பத்திரிகை நிருபர்கள், ஒட்டை ஒடிசலைச் செப்பனிட்டு, காரம் புளிப்புக் கூட்டி 'செய்தி'யை வெளியிடக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

காமிராக்காரர்கள், களிப்பையும் பொறுப்பையும், கெம்பீரத்தையும வீரத்தையும் காட்டிடத் தக்க 'வடிவம்' தரத் தயாராக உள்ளனர்.

வரவேற்பிதழ்களை வைத்துக்கொண்டு 'மானியம்' கேட்டோர் அனைவரும் நிற்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் பேசாமல்' வேறு எப்போதுதான் பேசுவது? பேசுகிறார், பேசட்டும்பாபம், பேசட்டும்! முதன் மந்திரி என்ற முலாம் குலையாதிருக்கும் இந்த வேளை தானே பேசுவதற்கான பொன்னான நேரம் — இப்போது பேசாமலிருப்பதா? பேசட்டும், பேசட்டும்—என்ன செய்வது, கேட்டுத்தானே தீரவேண்டும் என்ற போக்குடன் கனதனவான்களும், அதிகாரிகளும் இருக்கும் இந்த நேரத்திலாவது பேசட்டும்.

அடிக்கடி வாய்க்குமா? அனைவருக்கும் வாய்க்குமா? இந்த வாய்ப்பு கிடைக்காமல், பட்ட வேதனை கொஞ்சமா, வேதனை வெளியே தெரியாமலிருக்க எடுத்துக்கொண்ட முறைகள்தான் சாமான்யமா!

ஒவ்வோர் நாளும், ஒவ்வோர் ஊரிலும், ஓயாமல், திறப்பு விழா, துவக்க விழா, பயிற்சி முகாம் பட்டமளிப்பு விழா என்று ஏதேனும் ஓர் நிகழ்ச்சி—அவைகளிலே கலந்துகொண்டு மலர்ச்சி பெற்று ஓமந்தூராரும் குமாரசாமி ராஜாவும் ஆச்சாரியாரும், பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளில் கவர்ச்சிகரமாகத் தெரிந்துகொண்டிருந்த காலத்திலெல்லாம், கக்கனாய் இருந்துவந்த காமராஜருக்கு, இன்று கைலாகு கொடுக்கக் கவர்னரும், வழி காட்டி அழைத்துச் செல்ல கலெக்டரும், மாலை அணிவித்து மகிழ்ச்சியூட்ட கனதனவான்களும், 'ஜே' போடத் தொண்டர்களும், போட்டியிட்டுக்கொண்டு புறப்பட்டிருக்கும் இந்தப் பொன்னான சமயத்தை மண்ணாக விடுவதா, பேசுகிறார்—பேசட்டும் பேசட்டும். சமயமறிந்து பேசுகிறார், பேசட்டும்—நீண்ட நாள் பசி தீர்ந்து போகட்டும்.

பேசுகிறார் — ஆனால், என்ன பேசுகிறார்? இளவரசன் வாய் திறந்ததுபோலல்லவா இருக்கிறது.

கம்யூனிஸ்டு எதிர்ப்பு ஒழிந்து போய்விட்டது.

சோஷியலிஸ்டு சலசலப்பு கேட்கிறது — சட்டை செய்யப் போவதில்லை.

திராவிடர் கழகம் ஆதரவே தருகிறது.

தமிழரசுக் கழகம் எல்லை—எல்லை என்று பேசுகிறது — அந்தத் 'தொல்லை' பெரிதல்ல.

திராவிட முன்னேற்றக் கழகம் துள்ளுகிறது—தேர்தலில் ஈடுபடுமாம்.

இந்த எதிர்ப்புகள் எமக்கு எம்மாத்திரம்.

இருந்துகொண்டே இருப்பேன் —கிளம்பிவிட்டேனானால், அவ்வளவுதான், ஒழித்துக்கட்டிவிடுவேன்.

இது காமராஜரின் பேச்சைச் சலித்தெடுத்தால் கிடைப்பது. சலித்தெடுக்கும்போது, ஒரு ஆயிரம் 'உம்'மும், பல ஆயிரம் 'பெருமூச்சும்', சில நூறு 'அசை'யும் போய்விடும்—மிச்சமிருக்கும் மணிகள் இவை. இந்த 'மேலான' மதியை, நாடு காணத்தான், ஊரூரும் சென்று பேசுகிறார்.

இவர்கள் யார் தெரியுமா? வெள்ளைக்காரனுக்குக் 'குலாம்'கள் என்ற அந்தப் புளித்துப்போன 'காடி'யையே, ஊற்றி ஊற்றித் தருகிறார்—ஒரு முதன் மந்திரி.

நிர்வாகத் திறமை பெறுவதற்கேற்ற படிப்போ, பயிற்சியோ, பண்போ, இல்லாமலேயே நாடு ஆளும் நிலை கிடைத்தது எதனால் தெரியுமா — ஜெயிலுக்குப் போனதால், தடியடிபட்டதாக நாட்டுக்குக் கூறிக் கண்ணீர் வடித்ததால் —என்ற ஒரு உண்மையை ஊரறியச் செய்தால் போதும், இவர்கள் யார் என்பதற்கு, என்ன இலக்கணம் என்ற உண்மை, பந்தாடும் பாவைக்கும் விளங்கிவிடும்.

இதை மறந்த இந்த மதிமிக்கவர்கள், எதிர்க்கட்சிகள், வெள்ளைக்காரனுக்கு ஏவல் செய்த கூட்டத்தினர், என்ற 'பழைய போதை' ஒன்றைமட்டுமே நம்பிக்கொண்டுள்ளனர்.

இந்தப் பேச்சு, எவ்வளவு பயனற்றுப்போயிற்று, பொருளற்றுப் போயிற்று—மக்கள் எவ்வளவு துச்சமாகக் கருதித் தூ, தூ, வெனக் காரி உமிழ்ந்தனர் இந்தப் பேச்சின்மீது என்பதை சென்ற தேர்தல் எடுத்துக் காட்டிற்றே. பக்தவத்சலம் படுதோல்வி யுற்றதும், குமாரசாமிராஜா குப்புறக் கீழே தள்ளப்பட்டதும், கோபால ரெட்டியார் குலைதெறிக்கத் தோற்றோடியதும், எதைக் காட்டிற்று? அந்தத் தேர்தலின்போது, இவர்களெல்லாம் வெள்ளைக்காரருக்குக் குலாம்கள், நாங்களெல்லாம் வீர சுதந்திரப் போரில் வெந்து சாம்பலாகி பிறகு நாட்டைப் பரிபாலிக்க வேண்டும் என்பதற்காகவே ஆண்டவனல், உயிர்பெற்று எழுந்தவர்கள்—என்றெல்லாம் பேசவில்லையா? மக்கள், மந்தித்தனரோ? பலித்ததோ அந்தப் பிரசாரம்? இல்லை. எனினும் அதையே மீண்டும் பேசுகிருர், காமராஜர்,

ஆனல் பாபம், வேறு என்ன பேசுவார்?

பேசிக்கொண்டே இருக்கும் இப் பெருந்தலைவரின் நினைவிற்கு ஒரே ஒரு காட்சி மட்டும்தான தெரிய வேண்டும். பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைப் பிடித்து இந்தப் பெருவீரர்கள் குலுக்கிக் கொக்கரித்ததும், மற்றவர்கள், வெள்ளைக்காரனுக்கு 'அடிமை' வேலை செய்ததுமான ஒரே காட்சிமட்டும்தான தெரியவேண்டும்.

மக்கள், வேறு பலப்பல காட்சிகளையல்லவா, கண்டுள்ளனர் — நினைவிலே கொண்டுள்ளனர்.

தேஷ்முக்கும், டி. டி. கே-யும், அன்று இருந்த நிலையும் இன்றுள்ள உயர்வும்—காட்சிகளாகத் தெரியாமலா இருக்கிறது.

அன்று ஆங்கிலருக்கு, தோட்டக் கச்சேரி நடத்தி மகிழ்வித்த கனதனவான்கள் இன்று தேசியத் தலைவர்களுக்கு அதே திருத்தொண்டு புரிகிற காட்சி தெரியாமலா இருக்கிறது?

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் என்ற சிங்கத்தின் கோரப் பற்களைக் காமராஜர் தமது இரும்புக் கரம் கொண்டு பிடுங்கிக்கொண்டிருக்கிருர், சுற்றிலும் சில்லறைக் காங்கிரஸ்காரர்கள் 'ஜெயவிஜயீபவ' என்று கூறிக்கொண்டிருக்கிருர்கள், மேலே இருந்து தேவர்கள் பூமாரி பொழிகிருர்கள்—இப்படிப்பட்ட ஒரே காட்சிமட்டுமா தெரிகிறது!

அப்படித்தான் என்ன இந்தக் காமராஜர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான திட்டம் தீட்டித் தந்த நிபுணரோ? பிறர் அந்தத் திட்டத்தின் தீ தம்மைச் சுடும் என்று திகில்கொண்டு ஓடிய போது, அஞ்சேல், நான் இருக்கிறேன், நெருப்பிலேயே நீந்த வல்லேன், என்று கூறிச் சீறிப் போரிட்ட மாவீரரோ? வாழ்க்கையை வதைத்துக்கொண்ட வ. ஊ. சியோ, இல்லையே.

உலகிலே பொங்கிக் கொதித்தெழுந்ததோர் சூழ்நிலையால், இந்த மாவீரர்களின் மண்டலம் மட்டுமல்ல, பாகிஸ்தான், பர்மா, சிலோன், —இந்தோனேஷியா, இந்தோசீன—பிலிப்பைன் ஆகிய பல்வேறு நாடுகளும் 'விடுதலை' பெற்றன!

எனவே, 'விடுதலை' பெற்றது தாமொருவரே என்பது போல இறுமாந்து கிடப்பதும், கிடைத்த விடுதலையும் இவர் தம் வீரதீரத்தால் என்று வறட்டுரை பேசுவதும், அனுமதிக்கப்பட்டு விட்டதாலேயே, மறுக்கொணு மாமந்திரம் என்றுஎண்ணிக்கொண்டு பேசுகின்றனர்.

நாடு, இவர்கள் ஆட்சியில் சிக்கிய பிறகு

பிரிட்டிஷ் பிடியும்
அமெரிக்க ஆதிக்கமும்

முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிகமாகிவிட்டதுடன், நாடு இன்று வெளிநாட்டாருக்குச் சந்தையாகவும் சாவடியாகவும், சரசசல்லாபக் கூடமாகவும் மாறி விட்டிருக்கிறது என்று குற்றம் சாட்டுகிருேம் — புள்ளி விவரங்களைக் கொட்டிக்காட்டி.

இவர்கள் ஆட்சியில் முதலாளித்துவத்தின் உதட்டில் புன்னகை பூத்திருக்கிறது ஆனல் அதன் பிடி பலமாகி விட்டிருக்கிறது—என்று குற்றம் சாட்டுகிருேம்.

இவர்கள் ஆட்சியில், அடக்குமுறை தலைவிரித்தாடுகிறது, மக்கள் சுட்டு வீழ்த்தப்படுகிருர்கள் என்று குற்றம் சாட்டுகிருேம்.

எப்போதும் இல்லா அளவுக்கு வடநாட்டு ஆதிக்கம் வளர்ந்து திராவிடத்தை அடிமைக்காடு ஆக்கி விட்டிருக்கிறது என்று குற்றம் சாட்டுகிருேம.

கொடுமையும்
மடைமையும்

கொடிபிடிக்க கோலோச்சுகிருர்கள்; எதிர்ப்போரைச் சுட்டுத்தள்ளியபடி என்று குற்றம் சாட்டுகிருேம்.

ஊழலும்
ஊதாரித்தனமும்

மிகுந்து கிடக்கிறது இவர் தம் ஆட்சியில் உதவாக்கரைத் திட்டங்களுக்கு ஊர்ப்பணம் பாழாக்கப்படுகிறது என்று குற்றம் சாட்டுகிருேம்

## எல்லை பறிபோகிறது

## தன்மானம் அழிந்துபடுகிறது

தாசர்புத்தி தலைக்கேறி விட்டது என்று குற்றம் சாட்டுகிருேம்.

இவ்வளவும் கூறிவருகிருேம், "அத்தை கழுத்து போல, அம்மா! உன் கழுத்து எப்போது ஆகும்?" என்று பேசிய இளவரசன் போலக் காமராஜர், கவைக்குதவாத பேச்சினைப் பேசிக்கொண்டு வருகிருர்.

பேசட்டும், பேசட்டும் — மக்கள் பேதைகள் என்ற எண்ணத்தில் பேசிக்கொண்டிருக்கும் காமராஜர், மன்றம் அமைத்துத்தரவும், மாலை மரியாதைகளுக்கு ஏற்பாடு செய்துதரவும் சர்க்கார் யந்திரம் முனைந்து பாடுபடும் இந்தச் சமயத்திலாவது பேசாமல், வேறு எப்போதுதான் பேசுவது? பேசட்டும்!

★



# தென்பகுதி

# ★ இரயில்வே ★

இந்திய உப கண்டத்து இரயில்வேக்களின் சரிதை 1853ல் தொடங்குவது. பம்பாய்க்கும் தாணுவுக்குமிடையில் 21 மைல் நீளம் தண்டவாளத் தொடர் அப்போது போடப்பட்டது. பின்னர் ஹௌராவுக்கும் ஹூக்ளிக்குமாக 1854ல் 23 மைல் நீளமுள்ள இரயில்பாதை தோன்றியது. மூன்ருவதாக ராயபுரத்திலிருந்து வாலாஜா வரைக்கும் 65 மைல் தூரம் போடப்பட்டது தான் தென்னிந்திய இரயில்பாதை. இது 1856ல்.

1900ம் ஆண்டில் 330 கோடி ரூபாய் மூலதனச் செலவில் 25 ஆயிரம் மைல்கள் நீளமுள்ள இரும்புப் பாதை இந்தியாவெங்கும் உருவாகிவிட்டது. பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னர் நமது இரயில்வேக்களின் மொத்த நீளம் 40,524 மைல்கள் ரூ. 882 கோடி இவற்றின் மதிப்பு, இப்போதுள்ள நமது இரல்பாதைகள் 868½ கோடி ரூ. மதிப்புள்ள 34,275 மைல் நீளமுடையவையாகும்.

1852ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி மதராஸ் இரயில்வே கம்பெனியார் தான் இராயபுரம் - வாலாஜா பாதையை 1856ல் அமைத்தார்கள். 1861ல் கள்ளிக்கோட்டை அருகே கடலுண்டி வரையிலும் இந்தப்பாதை நீண்டுவிட்டது. 1888ல் கள்ளிக்கோட்டையும் இணைக்கப்பட்டு, கடந்த நூற்ருண்டின் இறுதிவரையிலும் இந்தப் பாதையின் கோடி முனையாக இருந்துவந்தது. ஜோலார்பேட்டை, பெங்களூர் பாதை 1864ல் தோன்றிய போதிலும், பெங்களூர் நகரம் இணைக்கப்பட்டது1888ல்தான். 1862ல் ரேணிகொண்டா வரையிலும் பின்னர் 1871ல் ரெய்ச்சூரும் இணைக்கப்பட்டன.

இராஜமந்திரி–வால்டேர்; விஜயவாடா — கொவ்வூர் பாதைகளை கிழக்கரை இராஜ்ய இரயில்வேயிடமிருந்து சென்னை இரயில்வே கம்பெனி 1901 ஜனவரி முதல் தேதி ஏற்றுக்கொண்டது. இதற்குள் கிருஷ்ணா, கோதாவரி பாலங்கள் பூர்த்தியாகிவிட்டன.

1882ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தென்மராட்டா இரயில்வேதான், எம்.எஸ்.எம். மைசூர் இரயில்வேக்களைச் சேர்ந்த மீட்டர்கேஜ் லைன்களையெல்லாம் அமைத்துக்கொடுத்தனர். 1888ல் போடப்பட்டகோவா, மர்ம கோவாவையும் இவர்களே முடித்துக்கொடுத்தார்கள். அப்போது இவர்கள் காரியாலயம் தார்வாரில் இருந்தது. 1884ல் ஹோஸ்பெட்—பெல்லாரி; கடாக்—ஹுப்ளி லைன்களும், 1885ல் தார்வார் — ஹோஸ்பெட் லைனும், 1890ல் பெங்களூர் வழியாக பூனவிலிருந்து மைசூருக்கும், விஜயவாடாவில் இருந்து மர்மகோவா வரையிலும் ஆன பாதைகளுடன் தென்மராட்டா இரயில்வே இருந்தது.

நாகையிலிருந்து திருச்சிக்கும் பின்னர் ஈரோடுக்கும் 1868க்குள் பாதைகள் போடப்பட்டிருந்தன. 1878ல்தான் தஞ்சை, மதுரை வழியாகச் சென்னையிலிருந்து தூத்துக்குடி பாதை உருவானபோதிலும், சிதம்பரம் அருகாமையில் கொள்ளிடப் பாலம் அதற்கு அடுத்த வருடம்தான் வேலை முடிந்தது. தனிப்பட்ட கம்பெனிகளிடமிருந்து இந்தப் பாதைகள் 1891ல் அரசாங்கத்தாரால் வாங்கப்பட்டு புதிதாகத் தோன்றிய தென்னிந்திய இரயில்வே கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டன. அத்துடன் விழுப்புரம், குண்டக்கல் சர்க்கார் இரயில்வேயும் கொடுக்கப்பட்டது. 1893ல் தர்மாவரம் குண்டக்கல் பிரிவு தென்மராட்டா இரயில்வேக்கும். ஜோலார்பேட்டை மங்களூர் பிரிவு நீலகிரி இரயில்வே ஆகியவை தென்னிந்திய இரயில்வேக்கு, 1907லும் ஒப்படைக்கப்பட்டன. அதே சமயத்தில் காட்பாடி—தர்மாவரம், பாகாலா—கூடூர் பாதைகளை தென்னிந்திய இரயில்வேயிடமிருந்து பெற்றுக்கொண்டு சென்னை — பெங்களூர் பாதையில் தென்னிந்திய இரயில்வே வண்டிகள் ஓடுவதற்கான உரிமையை எம். எஸ். எம் வழங்கிற்று.

மைசூர் — அரிசிக்கரை பாதையுடன் 1913ல் தொடங்கியது மைசூர் சர்க்கார் இரயில்வே. எம். எஸ். எம். இரயில்வேயிடமிருந்த பெங்களூர், மைசூர், நஞ்சன்கூடு, பிரூர் — ஷிமோகா பாதைகளை மைசூர் தர்பாருக்கு ஒப்படைத்தார்கள். சிட்டால் துர்க்கம் பாதை 1921ல் போடப்பட்டது. பெங்களூர் ஹரிஹார், எஸ்வந்தப்பூர்—ஹிண்டுப்பூர் பாதைகளும் 1938ல் மைசூர் சர்க்கார் இரயில்வேக்கு சேர்ந்தது. கடைசியாக 1950க்குள் எல்லா இரயில்வேக்களும் இந்திய அரசாங்கத்தின் நேர்ப்பார்வையின் கீழ் வந்துவிட்டன. தென்னாட்டையும் வடநாட்டையும் பிணைத்துக் கொடுத்த எம். எஸ். எம். இரயில்வேயும், இவற்றின் இடைவெளிகளைப் பூர்த்திசெய்த மைசூர் இரயில்வேயும், திருவாங்கூர்—கொச்சியை சென்னையுடன் இணைத்த தென்னிந்தியஇரயில்வேயும் யாவும் இப்போது ஒன்றுசேர்க்கப்பட்டு தட்சிண இரயில்வேஎன்ற பெயரில் உருப்பெற்றிருக்கிறது.

★

படத்தில் தென்படுபவருக்கு பதினைந்து வயதிருக்கும்—வேலை செய்த இடமோ துணிக்கடை—தாய் இருந்த ஊருக்கும் அக்கடைக்கும் இடையிலோ மைல் பதினைந்து — கடைக்காரன் துரத்துகிறான், அடிக்கிறான், குட்டுகிறான், தட்டுகிறான் — கொடுமைகளைத் தாங்கமுடியாது ஒருநாள் அதிகாலையில் எழுந்து ஓட்டம் பிடித்தான், தாயிடம். வெறும் வயிறு! மைலோ பதினைந்து! அலங்கோலமாக வந்து நின்ற மகனைக் கண்டதும், அங்கம் பதறினாள். "என்ன தம்பி?" என்றாள். "கடையைவிட்டு வந்துவிட்டேன் அம்மா" என்றான் தனயன், தாய்மட்டுமென்ன, உல்லாச உலகில் வாழும் நிலையா பெற்றிருந்தாள்? அல்ல; அவள், சீமான் வீடொன்றிலே பணிப்பெண். இந்நிலையில் என்ன செய்யமுடியும். "தம்பி! நாம் கஷ்டப்பட்டால்தானே பிழைக்கமுடியும். பேசாமல் திரும்பிப்போய் வேலையில் சேர்" என்றாள். மகன், சம்மதிக்கவில்லை. மாறாக, மீண்டும் வற்புறுத்தினால் தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிடுவேன் என்றான். பெற்ற மனம் என்ன செய்யும்?

"ஆசிரிய ஐயா!

என் கதி இப்படியாகிவிட்டது. பீங்கான் கடை வைத்திருந்த அப்பா, கடை நொடித்ததால் போய்விட்டார். என்னை, ஒரு துணிக்கடையில் எடுபிடியாக வைத்திருந்தார்கள். திறமையற்றவனென்று சொல்லி விலக்கியதால், ஒரு மருந்துக் கடைக்கு வேலைக்குப் போனேன். அங்கும் துரத்தியடிக்கவே, இன்னொரு ஊரிலிருந்த துணிக்கடையில் போய் அமர்ந்தேன். அவர்கள் படுத்திய கொடுமை தாங்காமல் ஓடி வந்துவிட்டேன். கண்ணீரும் பசியும்தான் இப்போது என் நண்பர்கள்! எத்தனை நாளைக்கு என்னால் இப்படி வாழமுடியும்? உங்களிடம் சிறு வயதில் படித்த மாணவன் என்பதால் வேண்டுகிறேன். எனக்கொரு வேலை தரமாட்டீர்களா?"



கல்லும் கரையும் இக்கடிதத்தைக் கண்டதும் ஆசிரியர் மனம் பதறினார். அவனை அழைத்தார். பள்ளியில் பாடம் போதிக்கும் பொறுப்பில் அமர்த்தினார். அவன் மனதுக்குப் பிடித்த வேலை கிடைத்தது. ஆனால், அவன் காலை ஒடித்தது, அவன் ஈடுபட்ட விளையாட்டு! கால்பந்தாட்டத்தின்போது, அவன் உயிருக்கே ஆபத்து வரக்கூடிய அளவுக்குப் படுகாயமடைந்தான். கால் முறிந்து, சுமார் ஓராண்டு இப்படி படுக்கையில் விழநேர்ந்ததால்தான், இவ்வளவு பெரிய எழுத்தாளனாகமுடிந்தது! இப்படியும் அப்படியும் அசையாமல் எப்படி படுத்தே கிடக்கமுடியும்? அதனால், அந்த ஓராண்டுக் காலத்தில், பொழுதைக் கழிக்க புத்தகங்களின் உதவியை நாடினான். எதாயிருந்தாலும் படித்தான், யார் கையிலிருந்தாலும் வாங்கிப் படித்தான்; இப்படிப் படிக்கப் படிக்க அவனுக்கு புத்தகம் இல்லாமல் பொழுதைப் போக்கமுடியாது என்றொரு நிலை வந்துவிட்டது. தான் படிக்கும் நூல்களைப்போலத் தானும் எழுதவேண்டும் என்று ஆசை கொண்டான்.

அப்படியே எழுதலானான். எழுதியதுமே ஏதாவது ஒரு பத்திரிகைக்கு அனுப்பிவிட்டு, பிரசுரமாகாவிட்டால், கோபங்கொள்ளும் நிலையில் எத்தனைபேர் இருக்கிறார்கள், உலகில்? அவன் அப்படிப்பட்டவனல்ல. உணர்ச்சி வேகத்தில் எழுதியதை மீண்டும் மீண்டும் படிப்பான்: அவனுக்கே அதிலுள்ள குறைபாடுகள் விளங்கும். உடனே, எழுதியவைகளைக் கிழித்துத் தீ மூட்டுவான். இப்படி, மனப்போராட்டத்துடனும், ஒரு பக்கம் நடக்க இயலாத நிலையிலும், காலத்தை நகர்த்தினான். மீண்டும் ஓரிடத்தில் ஆசிரியர் வேலை கிடைத்தது. அங்கே ஒரு மாணவி அவனிடம் பாடம் கேட்க வந்தாள். இவன் போதிக்கவில்லை எதனையும்! அவள், உலகின் இன்பம் எங்கே இருக்கிறது எனும் உண்மையினை எடுத்துரைத்தாள் தனதிரு விழிகள்மூலம்! "காதரீன், நீயே என் கண்மணி; நீ யின்றேல் நானில்லை என்றான். அவளும் மனமுவந்து ஏற்றாள்; மணவினையும் முடிந்தது.

காளை கட்டுப்படுவதும், புலி பூனையாவதும்; சோம்பேறிக்குச் சுறுசுறுப்பு வருவதும், அவனுக்கு வாய்க்கும் மனைவியைப் பொறுத்தது என்பர்! அது அவன் விஷயத்தில் உண்மையாயிற்று!! காதரீன் வரவு இவனைப் புது மனிதனாக்கிற்று, உடலிலும் தெம்பு ஏற்பட்டது; எழுதினான்! எழுதினான்! எழுதித்தள்ளிக்கொண்டே இருந்தான், 1946ல் அவன்சாகும் வரையில்!!

"உலக சரித்திரம்" அவனது படைப்புகளில் ஒப்பற்ற ஒன்று.

எழுதவேண்டுமென்று எண்ணம் வந்துவிட்டால் அதை மூடிபோட்டு அடக்கிவைப்பதில்லை. நடு நிசியானாலும் எழுந்து சரியோ தவறோ கிறுக்கிவைத்துவிட்டுத்தான் படுப்பான். சிறு வயதில் தந்தையின் பீங்கான் கடையிருந்த பொந்திலிருந்தபடி, வீதியில் போகும் ஒவ்வொருவரின் காலணிகளையும், அவைகளை அணிந்திருப்பவன் எப்படியெப்படி இருப்பான்! என்கிற யூகங்களையும்கூடத் குறித்து வைத்தானாம். துணிக் கடையிலிருந்தபோதும், ஓடியலைந்த நாட்களிலும், எந்த விஷயம் அவன் மூளையில்பட்டாலும் அதை உடனே குறித்துக்கொள்ளத் தவறுவதில்லையாம். அந்தக் குறிப்புகள் அவன் வசம் எப்போதும் இருக்குமாம். அதனால், நேரம், இடம், வசதி எதையும் அவன் எதிர்பார்ப்பதில்லையாம் நூல்கள் எழுத.

நாள் முழுதும் எழுதிக் குவித்துவிட்டு மாலை நேரத்தில் நண்பர்களுடன் வம்பளப்பதுதான் அவனுடைய பொழுதுபோக்காம்! நண்பர்கள் வரத் தாமதமாகிவிட்டால், தன்னுடைய காரை அனுப்பி தேடி இழுத்து வந்து பேசாவிட்டால் பொழுதே போகாதாம்!! அவன், தன்வாழ்க்கையைப் பற்றிக் கூறுகையில், "என்னை மனிதனாக்கியவன் துணிக்கடை முதலாளிதான். சோம்பேறியாகயிருந்த என்னை அடித்து வேலைசெய்யப் பழக்கியவன் அவன்தான். அவன் மட்டும் அப்படியெல்லாம் செய்யாவிடில், எனக்கும் இந்த உலகில் அவனைவிட நன்றாக வாழவேண்டும் என்கிற ஆசை வந்திருக்காது; இப்படி உழைக்கவும் கற்றுக்கொண்டிருக்கமாட்டேன்" என்பதாக. உழைப்பதில் சளைக்காமலும், நினைத்ததைக் குறிப்பெடுத்தும், அந்தக் குறிப்புகளால் குவலயம் புகழும் நூற்களையும் எழுதித் தந்தவன்தான் படத்திலிருக்கும் எச். ஜி. வெல்ஸ் எனும் ஹெர்பர்ட் ஜார்ஜ்வெல்ஸ்!!

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.